
விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka
21 JUL 2010

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பதினெட்டு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 05 புதன்கிழமை (21.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கைத் தமிழர் நிலையை அறிய அதிகாரிகள் குழு நியமிக்கப்படும்



## இந்தியப் பிரதமர் உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் நிலை அறிய முதலமைச்சர் கருணாநிதி ஆலோசனைப்படி அதிகாரி குழு நியமிக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார். மழைக்காலக் கூட்டத் தொடர் தொடங்க இருப்பதையொட்டி ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் டெல்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## 51-வது படையணி கோப்பாய்க்கு விரைவில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் சுபாஸ் ஹோட்டலில் இயங்கும் 51-வது படையணித் தலைமையகத்தைக் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது உள்ள சுபாஸ் ஹோட்டல் கட்டடத்தை விரைவில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் இராணுவத்தினர் 51-வது படையணித் தலைமையகத்தை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மாற்றவுள்ளதாகப் (18 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸ் நீல் பூனே சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனேக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பொன்று இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் கலந்துரையாடுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த நீல் பூனே, நேற்றுக் காலை நாடு திரும்பிய நிலையில் பான் கீ மூனின் ஆலோசனைக்கமைய பூனே இந்தச் சந்திப்பில் ஈடுபட்டதாகவும் மேற்படி தகவல்கள் கூறின.

இந் நிலையில் (18 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ் மக்களை ஒருபோதும் கைவிடமாட்டேன்

## கூட்டமைப்பிடம் கருணாநிதி உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களை எந்தச் சூழ்நிலையிலும் கைவிட மாட்டேன் எனத் தமிழக முதல்வர் கருணாநிதி அவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நேற்றுத் தமிழக முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதியைச் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்துச் சந்தித்துள்ளனர்.

இதன்போது இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கம் விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் எனக் கருணாநிதி கோரியி (18 ஆம் பக்கம் பார்க்க)



## தாயாரின் மனுவை ஏற்று தர்சிகாவின் சடலத்தை தோண்டியெடுத்து பிரேதப் பரிசோதனை செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலை குடும்ப நல உத்தியோகத்தர் சரவணை தர்சிகாவின் சடலத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் தோண்டி எடுக்க ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஆர்.வசந்தசேனன் நேற்று உத்தரவிட்டார்.

குறித்த சடலத்தினைக் கொழும்புக்கு அனுப்பி சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றபோது தனது மகள் தற்கொலை செய்யவில்லை என்றும் மீண்டும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என்றும் நீதிவானிடம் தர்சிகாவின் தாயார் மனு ஒன்றைக் கையளித்திருந்தார்.

இதனைப் (18 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வு தயாரிக்கப்படவில்லை

## அமைச்சர் திஸ்ஸ விதாரண விளக்கம்

(கொழும்பு)

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும்கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்பக் கட்டத் தீர்வுத் திட்ட அறிக்கையை, குறித்த கட்சிப்பிரதிநிதிகளின் கையொப்பம் இன்றி வெளியிடுவது தவறான விடயமாகும்.

அதன் இறுதித்தீர்வு இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள்-குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சிக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவரின் அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொண்டு திருத்தங்களுடன் கட்சியின் பிரதி (18 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்க்கும் மகன்களுக்கும் மரண தண்டனைத் தீர்ப்பு

சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் தாய் ஒருவருக்கும் அவரின் இரு மகன்களுக்கும் கல்முனை மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

எஸ்.உம்மா (வயது-45) அவரின் மகன்களாக எம்.பைஸால் (வயது-26), ஐ.ரிஷான் (வயது-24) ஆகியோர் 2004 ஆம் ஆண்டு ஒலிவில் பிரதேசத்தில் வைத்து மேற்படி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கொலை செய்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கிலேயே மேற்படி மூவருக்கும் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-5)

# ஐ.நாவின் ஆலோசனைக் குழு திங்களன்று கூடி ஆராய்வு

## ஆராய்வுக் கூட்டம் ஒரு வாரத்திற்குத் தொடருமாம்

(கொழும்பு)


இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றுள்ளது.

மூன்று நிபுணர்கள் குழு அடங்கிய குழுவின் முதல் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று நியூயோர்க்கில் இடம்பெற்றது என்பதை ஐ.நா. மன்ற செய்தித் தொடர்பாளர் பரான் ஹக் உறுதி செய்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் இந்தக் குழு முதற் தடவையாகக் கூடியதாக இன்னர் சிற்றி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினத்திலிருந்து நான்கு மாதத்திற்குள் இது தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் அதற்கேற்ற வகையில் இந்தக் குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நோர்த்லோன் கட்டடத்தில் நிபுணர் குழுவின் தலைவர் (18 ஆம் பக்கம் பார்க்க)




# நேரப் திட்டத்தின் கீழ் பண உதவி வழங்கல்

(கிளிநொச்சி)

உலக வங்கியின் நேரப் திட்டத்தின் கீழ் கடந்த 2006 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆயிரத்து 490 பேருக்கு வீடமைத்துக் கொடுப்பதற்காக தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை இந்த பண உதவி கிளிநொச்சி கிராமிய வங்கியூடாக வழங்கப்பட்டதாகவும் யுத்தகாலத்தின்போது வங்கிப் புத்தகத்தை தொலைத்தவர்கள் கிளிநொச்சி கச்சேரியில் அமைந்துள்ள நேரப் அலுவலகத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு பிரதிதிட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார். (ச-5)

# திருமண வாக்குறுதியளித்து பண மோசடி பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை

திருமணம் செய்து வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து மோசடி செய்யும் நபர்கள் குறித்து பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தகைய விளம்பரங்களுக்குப் பதிலளிக்கும் பெண்களிடம் அவர்களை திருமணம் செய்து வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதியளித்து வெளிநாடு செல்வதற்கான விசா மற்றும் ஏற்பாடுகளுக்காக 6 இலட்சம் வரை பணம் தேவைப்படுவதாகக் கூறி பணம் பெற்றுக் கொள்வது தெரிய வந்திருப்பதாக பொலிஸ் திணைக்களத்தின் மோசடிப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்ணான அரச ஊழியர் ஒருவர் மோசடிப் புலனாய்வுப் பிரிவிடம் புகாரிட்டுள்ளதாக அப்பணியகம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையில் மணப்பெண் தேடி விளம்பரம் செய்தபின்னர் பெண் ஒருவரிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற முயன்ற நபர் ஒருவரை தாம் கைதுசெய்திருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதேபோன்ற குற்றச்சாட்டுக்குள்ளான திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரையும் தாம் கைதுசெய்திருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (ச-5)




# இராணுவத் தளபதியை ஆஜராக பொன்சேகா கோரிக்கை

நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியவை அழைக்கவேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றைக் கிளப்பிய சரத் பொன்சேகா ஜூலை 16 ஆம்திகதி நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தன்னை பங்குபற்ற விடாமல் செய்ததன் மூலம் தனது நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுவதற்கு இராணுவத் தளபதியே பொறுப்பெனவும் கூறினார். (ச-5)

**மகேஸ்வரி நிதியத்தில் மணல் பெறுவதற்காக பணம் செலுத்துவோர் தமக்குரிய மணல் கிடைக்கும் திகதிகளை அவர்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கத்தின் அடிப்படையில் (ப.இல) தெரிந்து கொள்ளமுடியும்.**

| 21 th July 2010 | | | | | 22 th July 2010 | | | | | 23 th July 2010 | | | | 24 th July 2010 | | | | 26 th July 2010 | | | | 27 th July 2010 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 283 | 2889 | 3447 | 4020 | 4831 | 309 | 2963 | 3512 | 4021 | 4774 | 473 | 3173 | 3714 | 4470 | 473 | 3173 | 3753 | 4504 | 338 | 3295 | 3853 | 4643 | 999 | 3619 | 4215 |
| 833 | 2901 | 3475 | 4076 | 4837 | 488 | 2978 | 3523 | 4023 | 4774 | 524 | 3175 | 3720 | 4488 | 1151 | 3177 | 3761 | 4504 | 462 | 3311 | 3867 | 4715 | 1345 | 3625 | 4305 |
| 833 | 2938 | 3485 | 4095 | 4857 | 873 | 3005 | 3524 | 4076 | 4776 | 974 | 3185 | 3739 | 4488 | 1341 | 3194 | 3763 | 4540 | 473 | 3348 | 3879 | 4753 | 1497 | 3629 | 4313 |
| 1008 | 2969 | 3490 | 4159 | 4862 | 873 | 3049 | 3532 | 4100 | 4807 | 1237 | 3214 | 3753 | 4495 | 1460 | 3219 | 3795 | 4544 | 1341 | 3433 | 3893 | 4775 | 1526 | 3661 | 4332 |
| 1008 | 2969 | 3502 | 4162 | 5038 | 1008 | 3052 | 3550 | 4125 | 4825 | 1237 | 3218 | 3781 | 4495 | 1800 | 3241 | 3797 | 4583 | 1460 | 3451 | 3899 | 4775 | 2461 | 3678 | 4339 |
| 1217 | 2979 | 3510 | 4174 | 5113 | 1509 | 3066 | 3554 | 4162 | 4829 | 1509 | 3230 | 3794 | 4538 | 1868 | 3249 | 3867 | 4588 | 1526 | 3470 | 3951 | 4779 | 2496 | 3705 | 4354 |
| 1511 | 2985 | 3523 | 4193 | 5131 | 1559 | 3067 | 3559 | 4175 | 4847 | 1519 | 3240 | 3812 | 4542 | 2020 | 3273 | 3879 | 4607 | 1790 | 3471 | 3964 | 4779 | 2703 | 3705 | 4360 |
| 1555 | 3008 | 3531 | 4194 | 5137 | 1800 | 3094 | 3569 | 4193 | 4849 | 1800 | 3247 | 3856 | 4581 | 2319 | 3289 | 3891 | 4611 | 2417 | 3497 | 3966 | 5193 | 2769 | 3732 | 4404 |
| 1660 | 3009 | 3539 | 4224 | 5297 | 1851 | 3117 | 3576 | 4208 | 4862 | 2031 | 3247 | 3879 | 4588 | 2366 | 3311 | 3899 | 4697 | 2465 | 3515 | 3981 | 5261 | 2787 | 3752 | 4479 |
| 1781 | 3044 | 3553 | 4310 | 5304 | 2031 | 3122 | 3599 | 4310 | 5038 | 2251 | 3273 | 3891 | 4608 | 2457 | 3343 | 3950 | 4714 | 2500 | 3528 | 3996 | 5630 | 2820 | 3752 | 4500 |
| 1808 | 3049 | 3569 | 4313 | 5304 | 2032 | 3140 | 3612 | 4313 | 5137 | 2366 | 3288 | 3899 | 4611 | 2505 | 3346 | 3963 | 4716 | 2557 | 3534 | 4028 | 5639 | 2942 | 3761 | 4502 |
| 1810 | 3063 | 3607 | 4335 | 5453 | 2058 | 3155 | 3616 | 4333 | 5161 | 2458 | 3311 | 3912 | 4697 | 2555 | 3433 | 3981 | 4756 | 2583 | 3551 | 4050 | 5640 | 3048 | 3770 | 4520 |
| 1842 | 3074 | 3611 | 4357 | 5466 | 2074 | 3173 | 3635 | 4357 | 5297 | 2508 | 3338 | 3949 | 4717 | 2561 | 3449 | 3995 | 4775 | 2635 | 3557 | 4111 | 5688 | 3072 | 3796 | 4520 |
| 1865 | 3114 | 3635 | 4369 | 5469 | 2326 | 3175 | 3667 | 4369 | 5299 | 2538 | 3351 | 3961 | 4752 | 2568 | 3468 | 4027 | 4775 | 2635 | 3572 | 4180 | 5863 | 3112 | 3797 | 4523 |
| 1961 | 3118 | 3648 | 4404 | 5630 | 2347 | 3209 | 3697 | 4401 | 5304 | 2548 | 3373 | 3976 | 4757 | 2698 | 3482 | 4051 | 4779 | 2699 | 3573 | 4182 | | 3115 | 3801 | 4533 |
| 2032 | 3121 | 3655 | 4418 | 5650 | 2358 | 3210 | 3697 | 4401 | 5453 | 2561 | 3403 | 3986 | 4774 | 2716 | 3498 | 4130 | 4779 | 2716 | 3577 | 4196 | | 3128 | 3817 | 4566 |
| 2058 | 3139 | 3696 | 4421 | 5686 | 2437 | 3214 | 3709 | 4404 | 5466 | 2568 | 3443 | 3994 | 4775 | 2736 | 3514 | 4169 | 4784 | 2754 | 3593 | 4214 | | 3144 | 3861 | 4584 |
| 2074 | 3154 | 3696 | 4425 | 5848 | 2463 | 3232 | 3714 | 4406 | 5469 | 2598 | 3467 | 4021 | 4775 | 2753 | 3527 | 4181 | 5193 | 2769 | 3608 | 4313 | | 3159 | 3867 | 4604 |
| 2395 | 3174 | 3709 | 4426 | 7662 | 2463 | 3238 | 3715 | 4408 | 5630 | 2774 | 3482 | 4054 | 4844 | 2753 | 3534 | 4196 | 5301 | 2797 | 3620 | 4321 | | 3242 | 3870 | 4605 |
| 2398 | 3205 | 3718 | 4443 | 23226 | 2492 | 3239 | 3716 | 4408 | 5650 | 2795 | 3500 | 4136 | 4862 | 2779 | 3550 | 4210 | 5600 | 2860 | 3624 | 4323 | | 3248 | 3880 | 4611 |
| 2404 | 3208 | 3739 | 4462 | | 2521 | 3298 | 3739 | 4426 | 5686 | 2860 | 3513 | 4169 | 5294 | 2796 | 3556 | 4220 | 5619 | 2976 | 3662 | 4332 | | 3248 | 3897 | 4621 |
| 2437 | 3220 | 3754 | 4462 | | 2539 | 3305 | 3754 | 4429 | 5848 | 2922 | 3523 | 4181 | 5294 | 2860 | 3572 | 4313 | 5630 | 2981 | 3679 | 4341 | | 3252 | 3952 | 4702 |
| 2459 | 3223 | 3768 | 4472 | | 2547 | 3319 | 3754 | 4437 | | 2925 | 3533 | 4193 | 5297 | 2871 | 3574 | 4321 | 5688 | 3027 | 3702 | 4341 | | 3312 | 3965 | 4731 |
| 2468 | 3236 | 3791 | 4517 | | 2573 | 3332 | 3764 | 4461 | | 2958 | 3550 | 4209 | 5600 | 2923 | 3577 | 4333 | 5863 | 3043 | 3702 | 4360 | | 3353 | 3967 | 4751 |
| 2487 | 3254 | 3811 | 4556 | | 2662 | 3333 | 3781 | 4489 | | 2976 | 3555 | 4313 | 5619 | 2958 | 3596 | 4341 | | 3069 | 3714 | 4376 | | 3399 | 3978 | 4770 |
| 2542 | 3282 | 3854 | 4585 | | 2696 | 3351 | 3793 | 4489 | | 2977 | 3572 | 4325 | 5630 | 2975 | 3618 | 4341 | | 3072 | 3729 | 4402 | | 3435 | 3981 | 4779 |
| 2546 | 3298 | 3876 | 4609 | | 2729 | 3373 | 3812 | 4537 | | 3032 | 3575 | 4333 | 5686 | 2976 | 3620 | 4375 | | 3115 | 3731 | 4463 | | 3451 | 4002 | 4779 |
| 2569 | 3304 | 3882 | 4611 | | 2751 | 3380 | 3856 | 4556 | | 3035 | 3595 | 4351 | 7768 | 3025 | 3621 | 4376 | | 3125 | 3735 | 4519 | | 3472 | 4028 | 4797 |
| 2728 | 3331 | 3890 | 4647 | | 2779 | 3394 | 3882 | 4582 | | 3050 | 3617 | 4365 | 7768 | 3032 | 3649 | 4381 | | 3143 | 3752 | 4532 | | 3516 | 4037 | 4797 |
| 2751 | 3332 | 3947 | 4718 | | 2794 | 3403 | 3891 | 4608 | | 3068 | 3620 | 4380 | | 3042 | 3685 | 4404 | | 3158 | 3752 | 4539 | | 3536 | 4047 | 5133 |
| 2774 | 3351 | 3958 | 4762 | | 2836 | 3421 | 3948 | 4611 | | 3092 | 3621 | 4404 | | 3080 | 3700 | 4415 | | 3221 | 3760 | 4565 | | 3551 | 4101 | 5193 |
| 2793 | 3370 | 3977 | 4792 | | 2842 | 3442 | 3959 | 4697 | | 3117 | 3634 | 4415 | | 3116 | 3700 | 4483 | | 3242 | 3797 | 4583 | | 3558 | 4164 | 5264 |
| 2835 | 3373 | 3984 | 4806 | | 2891 | 3467 | 3975 | 4717 | | 3123 | 3686 | 4417 | | 3124 | 3714 | 4485 | | 3250 | 3799 | 4588 | | 3577 | 4180 | 5630 |
| 2881 | 3391 | 3986 | 4816 | | 2907 | 3485 | 3986 | 4727 | | 3141 | 3704 | 4437 | | 3142 | 3714 | 4485 | | 3253 | 3815 | 4605 | | 3594 | 4183 | 5688 |
| 2888 | 3439 | 3993 | 4816 | | 2958 | 3501 | 3994 | 4762 | | 3156 | 3704 | 4440 | | 3157 | 3730 | 4485 | | 3294 | 3842 | 4611 | | 3608 | 4196 | 5863 |

**குறித்த தினத்தன்று குறிப்பிட்ட பற்றுச்சீட்டுக்குரிய பயனாளிக்கு மணல் கிடைக்க தவறும் பட்சத்தில் உடனடியாக 021-2226837 என்னும் இலக்கத் திற்கு அலுவலக நாட்களில் மாலை 3.30 தொடக்கம் 5.00 மணிவரை முறையிடவும்.**

**- தம்பித்துரை றஜீவ் (செயற்றிட்ட இணைப்பாளர்)**

(C-713)

# இன்று ஒரு தகவல்

## நிழற்படக்கருவி

ஒரு நண்பர் வந்தார். அவர் சமீபத்தில் ஜப்பானுக்குப் போய் விட்டு வந்தவர்.

"நாம இரண்டுபேரும் சேர்ந்து ஒரு படம் எடுக்கவேணும்" என்றார்.

"கமரா இருக்கிறதா" என்றேன்.

"இதோ கையோடு கொண்டுவந்திருக்கிறேன்" என்றார்.

"எடுப்பதற்கு இன்னொரு ஆள் வேண்டுமே" என்றேன்.

"வேண்டாம். இதுவே எடுத்துவிடும்" என்றார்.

"தானாகவா?" என்று கேட்டேன்.

"தானா எடுக்காது. நான் கைதட்டினால் அது உடனே வேலை செய்ய ஆரம்பித்துவிடும்" என்றார்.

அதே மாதிரியே... அதை எதிரில் வைத்துவிட்டு என்னுடன் வந்து நின்று கொண்டு கையைத் தட்டினார். அது உடனே படம் பிடிக்க ஆரம்பித்து விட்டது.

இப்பொழுது இதைவிட நவீன கமராவெல்லாம் வந்து விட்டது.

இன்றைக்கு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கும் புகைப்படக் கலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா?

1839 இல் தான் இக்கலை ஆரம்பிக்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் லூயிட்கேர், இங்கிலாந்தின் வில்லியம் டால்பட் இருவரும் தான் புகைப்பட நெகடிவ் முறையைக் கண்டு பிடித்தார்கள்.

1840 இல் நியூயோர்க், பிலடெல்பியா ஆகிய நகரங்களில் உலகின் முதலாவது ஸ்டுடியோக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இருந்தாலும் 1888 வரைக்கும் கமராவை ஒரு விநோதமான கருவியாகத் தான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டில் தான் ஜோர்ஜ் ஈஸ்ட்மென் என்பவர் தனது 'கொடக்' கமராவை உருவாக்கினார்.

அப்பொழுது அதனுடைய விலை 25 டொலர் தான்.

இதன் பின்னர் தான் 'அமெச்சூர்' புகைப்படக்கலை' என்ற புனிதமான இயக்கம் ஆரம்பமானது.

1889 இல் ஈஸ்ட்மன் இன்னொரு புதுமை செய்தார். அதாவது செல்லுலாய்ட்டில் புகைப்பட புரோமைட் குழம்பைத் தடவி படம் எடுக்கும் முறையைக் கொண்டு வந்தார். படம் எடுத்து முடித்ததும் கமராவிலிருந்து அகற்றி விடக்கூடிய பிலிம் சுருளையும் அவர் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்பெல்லாம் படம் எடுத்ததும் அப்படியே கமராவோடு கொண்டுபோய் ஸ்டுடியோவில் கொடுத்துவிடவேண்டும். அங்கு தான் இருட்டறையில் கமராவில் இருந்து பிலிமை எடுப்பார்கள்.

அடுத்த 30 ஆண்டுகளில் எவ்வளவோ புதிய மாற்றங்கள். முன்பெல்லாம் கறுப்பு வெள்ளையிலேயே படம் எடுத்து கலர் தீட்டினார்கள்.

இப்பொழுதெல்லாம் கலர் படமே எடுக்கிறோம்.

1928 இல் தான் 'கொடக்' கலர் பிலிம் வந்தது. அதற்குப் பின்னர் தான் டெக்னிக் கலர் பிலிம் வந்தது.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த சமயத்தில் தான் புகைப்படக்கலை என்பது பத்திரிகைத்துறையின் ஒரு பிரிவாக சேர்க்கப்பட்டது.

இப்பொழுதெல்லாம் புகைப்படக்கருவி என்பது சமுதாய நடவடிக்கைகளை பதிவுசெய்யும் முக்கியமான கருவியாகும். உள்ளதை உள்ளபடி காட்டுவது நிழற்படம்.

உள்ளதை உணர்ந்த படி காட்டுவது ஓவியம்.

இந்தக் காலத்தில் உள்ளதை உணர்ந்தபடி காட்டும் நிழற்படங்கள் கூட உண்டு. ஒரு வீட்டில் ஒருசின்னப்பையன் "கமரா வாங்கிக் கொடுங்கள்" என்று அடம்பிடித்தான். வாங்கிக் கொடுத்தார்கள். நிறைய படங்களை எடுத்துத் தள்ளினான்.

அப்பாவிடம் கொண்டுவந்து காட்டினான்.

ஒரு படத்தை எடுத்துப் பார்த்தார் அப்பா. உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அம்மாவைக் கூப்பிட்டார்.

''இங்கே வந்துபார். உன்பையன் பண்ணியிருக்கும் காரியத்தை" என்று கத்தினார்.

"என்ன பண்ணியிருக்கிறான்?" என்று கேட்டுக் கொண்டே அம்மாவந்தார்.

''என்னை எப்படிப் படம் எடுத்திருக்கிறான் பார்.பார்க்கிறதுக்குக் குரங்கு மாதிரி இருக்கு. இவ்வளவு மோசமாகவா எடுக்கிறது.?" என்றார்.

இவர் கொஞ்சம் மெதுவாக அவரிடம் சொன்னார்.

''உங்களுடைய கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பாருங்கள். அது நிஜமாகவே குரங்குதான். நீங்கள் இல்லை." என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திக்கம் வடிசாலையில் கடந்த 6 மாதங்களில் 55 ஆயிரம் போத்தல் சாராயம் உற்பத்தி

(பொலிகண்டி)

வடமராட்சி பனை, தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியினால் நடாத்தப்படும் திக்கம் வடிசாலையில் கடந்த ஆறுமாதங்களில் 55ஆயிரம் போத்தல் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் கடந்த வருட அரையாண்டில் மாத்திரம் 65ஆயிரம் போத்தல் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ் வருட உற்பத்தியில் 15% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கான காரணம் என்னவெனில் கடந்த பங்குனி மாதம் முதல் தென்பகுதியிலிருந்து சுற்றுலா வரும் மக்களின் தொகை அதிகரித்துள்ளதால் கள்ளுக்கான நுகர்வோர் தொகை அதிகரித்துள்ள து.

இதனால் கள்ளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாலேயே வடி சாராய உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் தை, மாசி மாதங்களில் கூடிய உற்பத்தியினை மேற்கொண்டதுடன் பங்குனி, சித்திரை மாதங்களில் வீழ்ச்சியடைந்து வைகாசி ஆனி மாதங்களில் உற்பத்தி அதிகரித்துள்ளது.

மேலும் கடந்த இரு மாதங்களில் சுமார் 20 ஆயிரம் போத்தல் சாராயம் மேலதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(6-2)

# பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள உடுவில் ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் 13 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை மைதானத்தில் பாடசாலை ஆசிரியர் திருமதி லிங்கேஸ்வரன் உஷாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழக செயலாளர் திருமதி. தெ.இரத்தினகோபால் கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

# கஞ்சா வைத்திருந்தவருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை

(கரவெட்டி)

குடத்தனையைச் சேர்ந்த நபர் ஒருவர் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் , பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 19 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் நீதிமன்ற நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா, குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 6 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

இதேவேளை குற்றவாளி அபராதம் செலுத்தாமையால் 6 மாத சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். (2-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் வேலைக்காக உயரமுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை புன்னாலைக்கட்டுவன் , அச்செழு, புத்தூர் , ஆவரங்கால் , அச்சுவேலி, இடைக்காடு , வடமராட்சிப் பிரதேசம் அத்துடன் கரந்தன் , நீர்வேலி , கோப்பாய் ஆகிய இடங்களில் மின்தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (6-4)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நோர்வே நாட்டிலிருந்து வந்த சகோதரிகளின் புல்லாங்குழல் இசை நிகழ்வு அண்மையில் கிழவன்காடு கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. இதில் சகோதரிகள் புல்லாங்குழல் இசைப்பதை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

21.07.2010
(ஆடி 5, புதன்கிழமை)
ஏகாதசி பின்னிரவு 4.51 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.38 மணிவரை
இராகுகாலம் 12.01 - 1.31 மணிவரை
சுபநேரம் - 4.31-6.01 மணிவரை
வைஷ்ணவ சயன ஏகாதசி விரதம்
அமிர்த சித்தம்.


| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பகை, ஆரோக்கியக் குறைவு, காரியதாமதம், போசன சுகம். |
| இடபம் | களஸ்திர நன்மை, அபூர்வசந்திப்பு, முயற்சி கைகூடும், தன வருவாய். |
| மிதுனம் | தொழிலில் ஆர்வம், உடல் நலம், உறவினர் வருகை, காரிய நன்மை. |
| கடகம் | வியாபார நன்மை, உஷ்ண நிலை, முயற்சி தாமதம், தன விரயம். |
| சிங்கம் | ரோக நிலை, மனச்சஞ்சலம், தொழில் நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | மனோதைரியம், இஷ்ட சித்தி, பிரயாணம், கலந்துரையாடல். |
| துலாம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, காரிய தாமதம், விவாதம். |
| விருச்சிகம் | வெகுமானம், தெய்வசிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | குடும்பக் கவலை, பிறருக்கு உதவிசெய்தல், எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| மகரம் | தனதானிய சேர்க்கை, காரிய அனுகூலம், உறவினர் வருகை, தேகநலன். |
| கும்பம் | பெரியோரால் மதிக்கப்படல், தொழில் நன்மை, ஆரோக்கியமான நிலை, நல்ல செய்தி. |
| மீனம் | வேலைச்சுமை, தேவையற்ற பயம், பயணம், பெரியோர் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 |
| பச்சைமிளகாய் | 110 | 120 |
| தக்காளி | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 70 | 70 |
| கரட் | 120 | 130 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 30 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 |
| பயற்றங்காய் | 70 | 70 |
| லீக்ஸ் | 140 | 150 |
| பீற்றூட் | 60 | 70 |
| கறிமிளகாய் | 100 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 160 |
| போஞ்சி | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |











துளிர்கள் நிறுவனத்தின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மின்மினி சமூக சீர்திருத்த குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவும் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வரவேற் கப்படுவதையும் அமைச்சர், தொழில்நிறுவனப் பணிப்பாளர் கே.எஸ்.ரகு ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.அரசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் வி.கேசவனிடம் குறுந்திரைப்பட இறுவெட்டை வெளியிட்டு வைப்பதையும் நிறுவனப் பிரதிப் தலைவரும் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான பா. தனபாலன் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனனுக்கு இறுவெட்டை கையளிப்பதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.(படங்கள்:என்.குமார்)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் துணிகர திருட்டுச் சம்பவம்

## ரூ. 3 இலட்சம் பணம் கொள்ளை

கட்டைவேலி ப.நோ. கூ சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் துணிகர திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பின்புறக் கதவினை உடைத்துச் சென்ற திருடர்கள் உள்ளிருந்த இரும்புப் பெட்டியினை உடைத்து சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான பணத்தினை கொள்ளையடித்து தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

சமீபகாலமாக நெல்லியடிப் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது எனவும் நெல்லியடி ஸ்ரீ முருகன் மருந்துக் கூடம் ,உடுப்பிட்டி கோப் சிற்றி மற்றும் நெல்லியடி சாராய விற்பனை நிலையம் எனத் தொடர் நிகழ்வாக இடம்பெற்ற திருட்டுச் சம்பவ வரிசையில் தற்போது இவ் எரிபொருள் நிலையச் சம்பவமும் அப்பகுதி மக்களைப் பயத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேலும் இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் நெல்லியடிப் பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதியில் அமைந்துள்ளதாகவும் இக் கண்காணிப்பு மிகுந்த பகுதியில் இத் துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. (6-24)

# இலவச உலர் உணவு நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

11.08.2006 இன் முன் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 2010 யூன் மாதத்திற்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மேற்படி விநியோகத்திற்குரிய பொருட்களான சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா,சீனி, பருப்பு ஆகியன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று புதன்கிழமை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும். பொருட்களை நாவற்குழி உணவுச் களஞ்சியத்திருந்து உடன் பெற்று விநியோக நடவடிக்கைகளை 28ஆம் திகதி ஆரம்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அறியத்தந்துள்ளார். (4-2)

# விபத்து சம்பவத்தில் படுகாயம்

(பருத்தித்துறை)

நெல்லியடி வதிரி பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்து சம்பவத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நெல்லியடியைச் சேர்ந்த யோகநாதன் (வயது 52) என்பவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-2-10)

# தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாட வேண்டி இருப்பதால் அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனத்தில் சமுகம் தருமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (6-2)

# பொங்கல் விழா

(பொலிகண்டி)

பொலிகண்டி தியலம்பற்றை வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை காத்தவராயன் கழுவேறிக்கு வேள்வியும் இடம்பெறவுள்ளது. (4)




# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தனி நடனம், பாடல் போட்டிகள்

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தனி நடனம் மற்றும் பாடல் போட்டிகள் நடாத்த கொழும்புத்துறை றொசாரியன்சனசமூக நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கமைய 10 தொடக்கம் 30 வயதிற்குட்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்றும் போட்டியாளர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம்திகதிக்கு முன்னர் தலைவர்றொசாரியன் சனசமூக நிலையம், ஏ.வி. றோட் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு அனுப்பி வைக்குமாறு றொசாரியன் சனசமூக நிலைய கலை நிகழ்வுகளுக்கான பொறுப்பாளர் எஸ். யேசுதாஸ் தெரிவித்துள்ளார். (2-51)

# புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகத்தினால் மாவட்ட ரீதியிலான சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் நிர்வாகசபை உறுப்பினர்களுடனான முக்கிய கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட பேருந்து சேவைச் சங்கங்களின் தலைமைச் செயலக காரியாலயத்தில் தலைவர் பொ. கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட சங்க நிர்வாகத்தினர் கலந்து கொண்டு ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியம் என்ற பெயரில் இயங்குவதாகவும் இதனை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் பதிவு செய்து செயற்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் ஐந்து சங்கங்களைச் சேர்ந்த 15 பேர் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக யாழ். மாவட்ட பேருந்து சேவைச் சங்கங்களின் தலைவர் பொ. கெங்காதரனும் செயலாளராக மன்னார் மாவட்ட பேருந்து இயக்குநர் சங்க செயலாளர் ஆர். அன்ரன் பிறேமகாந்தனும் பொருளாளராக வவுனியா மாவட்ட பேருந்து இயக்குநர் சங்கத் தலைவர் எஸ்.ராஜேஸ்வரனும் போசகராக வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கனகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4)

# நவாலி மகாவித்தியாலயத்திற்கு ரூ.3. மில்லியன் செலவில் கட்டடம்

(நவாலி)

நவாலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வலிகாமம் கல்வித் திணைக்களத்தினால் 3 மில்லியன் ரூபா கட்டட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டட வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

சுமார் 40 அடி நீளமான செயற்பாட்டு மண்டபமானது விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டடத்தொகுதியின் மேலாக அமைக்கப்பட்டு வருவதாக அதிபர் இரா. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (6-2)



இந்து போட் இராசரத்தினம் அவர்களின் பிறந்த நாள் நினைவு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் கொண்டாடப்பட்டது. கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நினைவுப்பேருரை ஆற்றுவதையும்,சைவ சிறுவர் இல்லப்பிள்ளைகளின் கலை நிகழ்வு மற்றும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# அதிபர்களுக்கான மீளாய்வுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் நாளை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யாழ். புலோலி மே.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். இக்கூட்டத்திற்கு அதிபரையும், பொறுப்பாசிரியர் ஒருவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் 01.03.2010 இற்குரிய பாடசாலை விபரங்களாக உள்ள சீராக்குதல், உலக உணவுத் திட்டத்தின் கீழ், காலை உணவு வழங்குதல், ஆசிரியர் ஆளணி படிவத்தை சீராக்குதல், தர உள்ளீட்டு நிதி முன்னேற்றம், க.பொ.த சாதாரண பரீட்சை 2009 க்கான பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்தல், தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களின் விபரம், இடம் பெயர்ந்த மாணவர், நிரந்தர மாணவர் பற்றிய விபரம், இரண்டாம் தவணைப் பரீட்சை பற்றி ஆராய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய இருப்பதால், அதிபர்கள் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் போது, மேற்கூறிய விபரங்களை எடுத்து வந்து சீராக்குமாறு வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (2-19)

# பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தில் உள்ள விக்கினேஸ்வரா ஞானக்குழந்தையின் 18 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா எதிர் வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி.சிவானந்தராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக செலிங்கோ காப்புறுதி கம்பனியின் யாழ். கிளை முகாமையாளர் சேனாதிராஜா தவசீலன், பாலர் கல்விக் கழக தலைவரும் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியருமான எஸ்.பி. காசிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

# மணியந்தோட்டம் -மண்ணித்தலை இடையிலான படகுச் சேவைகளில் நேர மாற்றம்

மணியந்தோட்டம் மண்ணித் தலைப் பிரதேசங்களுக்கிடையிலான படகுச் சேவை இடம் பெறும் நேரங்களில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இதற்கமைய முதலாவது படகுச் சேவை காலை 7 மணிக்கும் இரண்டாவது படகுச் சேவை மதியம் 11 மணிக்கும் இறுதிச் சேவையானது பி.ப. 2.மணிக்கும் மணியத் தோட்டத்தில் இருந்து புறப்படும் என அறிவித் தல் பலகையில் மாற்றம் செய்யப்பட்டு எழு தப்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை இ.போ.ச. பஸ் சேவை காலை பயணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து மணியந்தோட்டத்திற்கு காலை 7 மணிக்கு முன்னதாகவே செல்கின்றது.

மண்ணித்தலையில் இருந்து வரும் இறுதிப் படகுச் சேவையானது மாலை 4.45 மணி தொடக்கம் 5 மணிக்கு இடைப்பட்ட வேளையில் மணியந்தோட்டத்தை வந்தடைகின்றது.

இப்பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக மணியந்தோட்டத்தில் ஒரு இ.போ. ச. பஸ் காத்து நிற்கிறது. பூநகரியில் வேலை செய்யும் ஊழியர்களில் சிலர் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரிக்குச் சென்று பின்பு மாலையில் திரும்புவதற்கு படகுச் சேவையானது வழி செய்வதுடன் இக்கடற் பயணமானது ஒரு மணித்தியாலம் வரை அமைகின்றது.

இதேவேளை வரலாற்றுப் புகழ் மிக்க மண்ணித்தலை சிவன் கோவில் முன்பாக இறங்கு துறை அமைந்திருப்பதால் இறங்கு துறையில் இருந்து 25 மீற்றர் தூரத்திற்குள் பஸ் பயணிக்கும் வீதியால் மண் கும்பி ஒன்று சரியும் தறுவாயில் உள்ளதால் அவ் வீதி பனமரக்கொட்டுக்கள் போட்டு அதனை கட்டி மண் சாய்வு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# அனுராதபுரம் விமானப்படை முகாம் தாக்குதல் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மறுப்பு

(கொழும்பு)

அனுராதபுரம் விமானப்படை முகாம் மீதான தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலி சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதை அனுராதபுரம் பிரமத நீதவான் மீண்டும் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதாவன் உத்தரவிட்டார்.

மேலும் தாக்குதல் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளுக்குரிய சகல தடயப்பொருட்களையும் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (6-4)

# வவுனியாவில் 4 ஆயிரத்து 500 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

வவுனியா பிரதேச செயலக பிரிவிலுள்ள சேமமடு ஆறுமுகத்தான் புதுக்குளம், மாளிகை மரையடித்த குளம், இளமருதன் குளம் ஆகிய கிராம மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம். எஸ். சாள்ஸ் தெரிவித்துள்ளார். இந்த இடங்களில் 740 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்து 500 பேர் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் இப்போது தமது காணிகளை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கூரைத்தகடுகள் அடுத்த வாரம் வந்து சேர்ந்ததும் குடியேறும் மக்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (6-4)

# பொலிஸ் சேவைக்கு மேலும் ஆட்சேர்ப்பு முதற்கட்டமாக 7 ஆயிரம் பேர் இணைப்பு

(கொழும்பு)

பொலிஸ் சேவைக்கு இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கை தற்போது நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக சுமார் 7 ஆயிரம் பேர் வரையில் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்நிலையில் உபபொலிஸ் பரிசோதகர்களுக்கான வெற்றிடத்துக்கு இளைஞர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை நேற்று காலை கொழும்பு பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (6-4)

# நாட்டின் உட்பிரதேசத்திலும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் உட்பிரதேசத்திலும் சுற்றுலாத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென இனங்காணப்படும் பிரதேசம் சுற்றுலாத்துறைக்கென அபிவிருத்தி செய்யப்படுமெனவும் நாட்டின் கரையோரப் பகுதிகளில் சுற்றுலாத் தொழில் பரவலாக இடம்பெற்று வருவதாகவும் சுற்றுலாத் தொலை நாட்டின் உட்பிரவேசத்திற்குள் கொண்டு சென்று நிலைமையை சமநிலைப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கருத்து வெளியிடுகையில், பூர்வாங்க நடவடிக்கையாக தெனியாய பிரதேசம் சுற்றுலாத் தொழிலுக்கென அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளதுடன் சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்திக்கு தொழில் நுட்பமும் உபயோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (6)






கரணவாய் வடக்கு கருணையம்பதி
மூத்த விநாயகர் ஆலய
(6ம் திருவிழா உற்சவம்)
[சயனக்காட்சி உற்சவம்]
21.07.2010

நிகழும் விகிர்தி வருடம் ஆடி 5ம் நாள் (21.07.2010) புதன்கிழமை எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் அதி விஷேட அபிஷேகமும் மகோற்சவ பூசையும் நடைபெறும்.

பகல் நிகழ்ச்சி :- 1.30 மணிக்கு நாதஸ்வர தவில் கச்சேரி ஆரம்பமாகும்.
காலம் சென்ற இணுவிலூரை சேர்ந்த சின்னராசாவின் புதல்வர்கள்

1) ரவீந்திரன்
2) சுதாகர்
3) பஞ்சமூர்த்தி
4) பஞ்சமூர்த்தியின் புதல்வர் குமரேஸ்
5) சிதம்பரநாதன்
6) S.L.ஜெகநாதன்
7) நந்தன்

ஆகியோரின் தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறும்

அதனைத் தொடர்ந்து மேளக்கச்சேரியுடன் எம்பெருமானும் பரிவாரமூர்த்திகளும் சயனசாற்றுப்படியுடன் இரவு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மூத்து சப்பறத்தில் வீதியுலா வருவார்.

இரவு நிகழ்ச்சி :- இரவு 8.00 மணிக்கு தவில் நாதஸ்வரம் ஆரம்பமாகும். அதனை தொடர்ந்து எம்பெருமான் வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து விசேஷ இசை நிகழ்ச்சியாக கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட இலங்கையின் முன்னணி இசைக்குழுவான M. சிவகுமாரின் அக்கினி இசைக்குழு இடம்பெறும்.

ஒளி அமைப்பு - கணபதி வல்வெட்டித்துறை
ஒலி அமைப்பு - கலைமகள் அல்வாய்
சப்பறம் - பஞ்சாட்சர ஐயா இணுவில்
மேடை அமைப்பு - லிங்கம்ஸ் தூதாவளை கரணவாய்

அனைவரும் வருக ! எம் பெருமான் அருள் பெறுக.

(C - 7110)

இங்ஙனம்
எம் திருவிழா உபயகாரர்கள்

# தேசிய ஆயுள் வேத வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை தேசிய ஆயுள்வேத வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது தேசிய ஆயுள்வேத திட்டங்களை ஊக்குவிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஆயுள்வேத ஆணையாளர் ரமணி குணவர்த்தன குறிப்பிட்டார்.

ஆயுள்வேத வாரம் தொடர்பாக மாகாண முதலமைச்சர்கள் மற்றும் ஆயுள்வேத வைத்தியர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வு ஆயுள்வேத ஆய்வு நிலையத்தில் நேற்றைய தினம் நடைபெற்றதாகவும் இதன் போது மூலிகைத் தாவரம் குறித்து அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகவும் மூலிகைப் பூங்காவொன்றை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஆயுள்வேத மருத்துவம் குறித்து பாடசாலை மாணவர்களை தெளிவுபடுத்தல் பாரம்பரிய ஆயுள்வேத வைத்திய நிலையங்களை ஸ்தாபித்தல் ஆகிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆயுள்வேத வாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் வடபகுதி வைத்தியர்களை சந்தித்து அவர்களையும் தெளிவுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆயுள்வேத ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (6-4)

# மகோற்சவம்

(கொழும்புத்துறை)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் மகோற்சவம் 29ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறும்.

ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வைரவ சுவாமி அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வரை இரவு 9 மணிக்கு சைவப்புலவர் நா. நவராஜ் சக்தியின் மகத்துவங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (2-51)

# இலங்கையில் விமானச் சேவைகளை நடாத்த 13 நிறுவனங்கள் விண்ணப்பம்

(கொழும்பு)

13 விமான சேவை நிறுவனங்கள் இலங்கையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் மேற்கொள்ள விமான சேவைகள் அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றிற்கு விண்ணப்பித்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு தேவையான சிறிய ரக விமானங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஜனாதிபதி செயலகத்திடம் இலங்கை விமானப்படை கோரியுள்ளது.

60 நாட்களுக்குள் அனுமதி கிடைத்தவுடன் குறித்த விமான நிறுவனங்கள் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதன் மூலம் இலங்கையின் பொழுது போக்குத் துறை அபிவிருத்தியடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விமானப்படை ஏற்கனவே யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கிற்காக வர்த்தக விமான சேவையை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# வெளிநாட்டுத் தூதரகங்களில் பல்வேறு குழப்ப நிலைமைகள்

(கொழும்பு)

உரிய முறையில் தூதுவராயங்களுக்கான பணியாளர்களை நியமிக்காத காரணத்தினால் பல்வேறு குழப்ப நிலைமைகள் ஏற்பட் டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தூதுவராலயங்களின் முக்கிய பதவி வெற்றிடங்கள் சரியான முறையில் நிரப்பப்படாத காரணத்தினால் வெளிநாட்டு தூதுவராலயங்களில் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகனமான நாடுகளில் பணியாற்றி வரும் தூதுவராய அதிகாரிகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள போதிலும் உரியமுறையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வில்லை எனவும் உத்தியோகப்பூர்வ பதவிக்காலம் நிறைவடைந்துள்ள போதிலும் குறுங்கால சேவை நீடிப்பின் அடிப்படையில் குறித்த அதிகாரிகளே பணிகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் அதிகமாக வசிக்கும் கனடாவிற்கான இலங்கைத் தூதரகத்தின் முக்கிய பதவி வெற்றிடமொன்று ஆறு மாத காலமாக நிரப்பப்பட வில்லை எனவும் ஜப்பான், சுவீடன், வட கொரியா, ஜேர்மனி போன்ற நாடுகளினதும் தூதுவராலயங்களிலும் இவ்வாறான குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான **French** மொழி வகுப்புக்கள் French Emabassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட **ALLIANCE FRANCAISE** யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்
விரிவுரையாளர்கள்: பிரான்சியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோரும்
***புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.***
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.
C711



அனலை தீவு நயினார்குளம் குழாவடியுறை
அருள் மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் திருக்கோயில்

வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா
விஞ்ஞாபனம் - 2010

ஐயன் அடியார்களே!

அனலை தீவு அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனாருக்கு நிகழும் விகிர்தி வருஷம் ஆனி மாதம் 32ம் நாள் (16.07.2010)வெள்ளிக்கிழமை துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று தொடர்ந்து 11 தினங்கள் மஹோற்சவ பெருவிழா நடைபெறுகின்றது. இக் காலங்களில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து திருத் தொண்டுகள் பல புரிந்து ஐயன் அருள் பெறுவீர்களாக!

தொடரும் பெருவிழா நிகழ்வுகள்

23.07.2010 :- பகல் 108 சங்காபிஷேகம் சந்தன அலங்காரம்.மாலை சப்பைரத உற்சவம்(சப்பறத்திருவிழா)
24.07.2010 :- தேர்த்திருவிழா 11.00 மணிக்கு இரத ஆரோகணம் வீதியுலா
25.07.2010 :- தீர்த்தத்திருவிழா காலை 10.00 மணிக்கு தீர்த்தமாட எழுந்தருளல்.
நண்பகல் 12.00 மணிக்கு யாக கும்ப அபிஷேகம், இரவு 8.00 மணிக்கு கொடி இறக்கம்.
26.07.2010 ;- இரவு திருக்கல்யாண உற்சவம்

மஹோற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக"

பரிபாலன சபை
ஐயனார் திருக்கோயில்

அனலை தீவு - 5 (1889)

# தமிழில் சொற்பொழிவு இலக்கியம் ②

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக் கட்டுரை

## தோற்றமும் வளர்ச்சியும்

**ச.லலீசன்**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

மணிமேகலையில் இடம்பெறும் "சமயக் கணக்கர்-தம் திறம் கேட்டகாதை" என்ற பகுதி பிரசங்கச் செயன்முறை பற்றிய தகவல்களைத் தருகின்றது. மணிமேகலை வஞ்சி மாநகரினுள்ளே சென்று, அவ்விடத்தேயுள்ள சமயக் கணக்கராகிய அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவாவாதி, வேதவாதி, ஆசீலகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகிய பலரும் தத்தம் சமயத்து நுண் பொருட்களை உரைக்கக் கேட்டு அவற்றை அறிவதாகக் கூறப்படுகின்றது. எடுத்துக் காட்டாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

*"நவையறு நன்பொருள் உரைமினோ"*
*எனச்*
*சமயக்கணக்கர் தந்திறஞ் சார்ந்து*
*வைதீக மார்க்கத்து அளவை வாதியை*
*எய்தினள்..."* (மணிமேகலை27:01)

மணிமேகலை ஐரோப்பியருடைய வருகையின் பின் கிறிஸ்தவம் -இந்து என்ற நிலையில் தத்தம் சமயம் சார்ந்த செய்திகளைச் சொல்வதற்கு 'பிரசங்கம்' பயன்பட்ட தளத்தை சிலப்பதிகார மணிமேகலையில் இடம்பெறும் உரைபற்றிய செய்திகளோடு பொருத்திப் பார்க்கலாம். பிரசங்கச் செயன்முறையின் ஒரு படிநிலை வளர்ச்சி வடிவமாகப் பட்டிமண்டபம் அமைகிறது. பட்டிமண்டம் என்பது அறிஞர்கள் கூடி வாதிடும் களம் ஆகும். பட்டிமண்டபம் பற்றிய செய்திகளையும் சிலப்பதிகாரம், மணிமேகலை ,திருவாசகம் போன்ற பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது. சிலப்பதிகாரம் இந்திர விழாவூர் எடுத்த காதையில்.

*"மா நீர் வேலி வச்சிர நல்நாட்டுக்*
*கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்*
*மகத நல்நாட்டு வாள்வாய் வேந்தன்*
*பகை புறத்துக் கொடுத்த பட்டி*
*மண்டபமும்"*
(இ.எ.காதை 99-102)

என வரும் அடிகள் ஊடாகப் பட்டிமண்டபம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. மணி மேகலை விழாவறை காதையில்

*"தண்மணற் பந்தரும் தாழ் தரு*
*பொதியிலும்*
*புண்ணிய நல்லுரை அறிந்தோர்*
*பொருந்துமின்*
*ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்*
*பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்,,*
(விழாவறை காதை 58-61)

எனவரும் அடிகளால் பட்டிமண்டபம் பற்றிய செய்தி காட்டப்படுகின்றது. பல்லவர் காலத்தில் எழுந்த திருவாசகத்திலும் பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு உள்ளது.

*"கட்டறுத்தெனை யாண்டு கண்ணார நீறு*
*இட்ட அன்பரொடி யாவருங் காணவே*
*பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை*
*எட்டி னோடிரண்டும் அறியேனையே"*
(திருவாசகம்:திருச்சதகம்:49)

இங்கு பெறப்படும் செய்திகளில் இருந்து பட்டிமண்டபம் என்ற செயற்பாடு அறிஞர்களுடன் அல்லது புலமையுடன் தொடர்புடையது என்பது பெறப்படுகின்றது.

சோழர் காலத்திலெழுந்த கம்பராமாயணத்திலும் பட்டி மண்டபம் பற்றிய செய்தி உள்ளது.

*"மாட கூடங்கள் மாளிகை ஒளிகை ஒளிகை*
*மகளிர்*
*ஆடு அரங்குகள் அம்பலம் தேவர்*
*ஆலயங்கள்*
*பாடல் வேதிகை பட்டி மண்டபம் முதல் பலவும்*
*நாடி ஏகினன் இராகவன் புகழ் என்னும்*
*நலத்தான்"* (கம்பராமாயணம்:சுந்தர காண்டம்:133)

இராவணன் சபையை நாடிய அனுமன் அச்சபையில் பலர் முன்னிலையில் உரையாற்றியதாகக் கூறப்படுகின்றது. 'உன்னைக் காட்டுவாரின்மையால் வனத்தை அழித்தேன். என்னைக் கொல்ல வந்தார்களைக் கொன்றேன். பின்னும் உன்னிடம் வந்தது செய்தி உரைக்கவே' என்கின்றான் அனுமன். பின்வரும் பாடல் இதனைக் குறிப்பிடுகின்றது.

*"காட்டுவார் இன்மையால், கடி காவினை*
*வாட்டினேன் என்னைக் கொல்ல வந்தார்களை*
*வீட்டினேன் பின்னும் மென்மையினால் உன்தன்*
*மாட்டு வந்தது, காணும் மதியினால்"*
*(கம்பராமாயணம்:சுந்தர காண்டம்:109)*

எனக்கூறி உரையாற்றத் தொடங்குகின்றான். இன்னும் கம்பராமாயணத்தில் பல இடங்களில் 'சொல்லின் செல்வனாகிய' அனுமன் புத்திசாதுரியமாக உரையாற்றியதாகக் கூறப்படுகின்றது.

எனவே பண்டைத் தமிழர் வாழ்வியலில் குறித்த ஒரு பொருள் பற்றி உரையாற்றும் மரபு இருந்துள்ளது எனத் திடமாக நம்பலாம்.

சொற்பொழிவை அடிப்படையாகக் கொண்டு பல செயற்பாடுகள் உருப்பெற்றுள்ளன. கருத்தரங்கம், ஆய்வரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம் முதலியன இதற்கான எடுத்துக் காட்டுக்களாக அமையும்.

'பிரசங்கம்' என்ற பெயருடன் முதன் முதலாக எழுந்த இலக்கியமாக யாக்கோமே கொன்சால் வெஸ் (1676 - 1742) என்பவரால் எழுதப்பட்ட **'வியாகுல பிரசங்கம்'** விளங்குகின்றது.

இந்நூல் 1730 இல் ஆக்கப்பட்டு இன்று வரை பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. கிறிஸ்து பூங்காவனத்தில் மரணவேதனைப் பட்டது முதல் மரணித்த அவரது உடல் சிலுவையினின்று இறக்கப்பட்டது வரையுமாக ஒன்பது பிரசங்கங்களாக 'வியாகுல பிரசங்கம்' வகுக்கப்பட்டுள்ளது.

"வியாகுல பிரசங்க ஆசிரியர் 1700 ஆம் ஆண்டு பெற்றோ ரின் கடும் எதிர்ப் புக்கு மத்தியில் புனி தர் பிலிப்பு நேரி யாரின் தியான சம் பிரதாய சபையில் (ஒரற்றோரியன்) இணைந்து தமது இருபத்திநான்காம் வயதிலே பணிக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்." என ஞான முத்து பிலேந்திரன் குறிப்பிடுகின்றார்.



ஒரற்றோரியன் சபையைச் சார்ந்தவர் ஆதலால் தான் சார்ந்த அமைப்பைச் சார்ந்து தனது நூலுக்கு 'பிரசங்கம்' என அமையுமாறு பெயர் சூட்டியிருக்கலாம்.

பிரசங்கம் என்பது மக்கள் மொழியில் எடுத்தியம்புதல் என்ற பொருளை நாடி இயேசு கிறிஸ்து பட்ட துன்பங்களை எடுத்தியம்பும் நூலுக்கு ஆசிரியர் வியாகுல பிரசங்கம் எனப்பெயர் அமைத்தார் என எண்ணத் தோன்றுகின்றது.

1816 ஆம் ஆண்டில் சமயம் பரப்பும் நோக்குடன் அமெரிக்க மிஷன் சார்ந்த கிறிஸ்தவர்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தை நாடினர். இவர்கள் பெரும்பாலும் ஜோன் கல்வினுடைய தூய்மைவாத (PURITAN) மரபில் வந்தவர்கள். இவர்களுடைய வழிபாட்டு முறைமையில் பிரசங்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இயேசு கிறிஸ்து சார்ந்த பெருமைகளை எடுத்தியம்பும் வடிவங்களுள் ஒன்றாகப் பிரசங்கத்தை இவர்கள் கையாள்கின்றனர். அமெரிக்க மிசனறிமாரால் 1823 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் ஒரு செமினறி அமைக்கப்பட்டது. (BATTICOTTA SEMINARY) இவர்களது பாடத்திட்டத்தில் 3 ஆவது வருடக் கல்வியில் மேடைப் பேச்சு ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டது.

(தொடரும்)

## நிறுவன அபிவிருத்தி கூட்டம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர்கள் பிரிவுக் கிளைகளின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கான நிறுவன அபிவிருத்தி கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலை மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளை அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் DRR பயிற்சிநடைமுறைப் படுத்துவதற்கு கல்லூரிகள் தெரிவு செய்யப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-2-134)

## கொழும்பின் வடபகுதியில் 10 ஆயிரம் பேரின் வாக்குரிமை திட்டமிட்டு பறிக்கப்பட்டுள்ளது

### ரவி கருணாநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பின் வடக்கில் 10ஆயிரம் பேரின் வாக்குரிமை திட்டமிட்ட வகையில் பறிக்கப் பட்டுள்தாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட வகையில் கொழும்பு வடபகுதி வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் பீ.எம்.சிறிவர்த்தனவிடம் ரவி கருணாநாயக்க முறைப்பாடு செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார மையங்களில் ஒன்றாகக் கருதப்படும் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டுள்ளதாகவும் வருடாந்தம் வாக்காளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை1 இலட்சத்து 63 ஆயிரமாகக் காணப்பட்டதாகவும் 2007 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 1 இலட்சத்து 3 ஆயிரத்து 50 பேர் ஆகவும் 2008 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 84 ஆயிரத்து 801 ஆகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

வாக்காளர்களைப் பதியும் போது வேண்டுமென்றே வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப் படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



இதேவேளை வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுவதாக பவ்ரல் மற்றும் கபே ஆகிய முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் முறைப்பாடு செய்துள்ளன. (6-2)

## தொடர்ந்தும் உத்தியோக பூர்வ இல்லங்களை பயன்படுத்தும் முன்னாள் எம்.பிக்கள்

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய ஆறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் உத்தியோக பூர்வ இல்லங்களைப் பயன்படுத்தி வருவதாக பொது நிர்வாக அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ,ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இலங்கை தேசியக் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தொடர்ந்தும் உத்தியோக பூர்வ இல்லங்களில் தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொழும்பு கெப்பிட்டிப்பொல மாவத்தையில் அமைந்துள்ள சுமித் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் இந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கியுள்ளதுடன், பல்வேறு காரணங்களைக் காட்டி குறித்த வீடுகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க இவர்கள் அனுமதி கோரியுள்ளனர்.

குறிப்பாக எதிர்வரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தமது பிள்ளைகள் தோற்றுவதாகவும் பரீட்சைகள் முடிவடை யும் வரையில் வீடுகளில் தங்கியிருக்க அனுமதியளிக்குமாறும் சிலர் கோரியுள்ளனர்.

ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னரும் வீடு களில் தங்கியிருக்கமுயற்சித்தால்சட்ட நடவடிக்கைஎடுக்கப் படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

### கண்ணிவெடி அகற்றும் பணிகளில்

## புலிகளின் முன்னாள் போராளிகளை ஈடுபடுத்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் பெண் போராளிகளும் கண்ணிவெடியகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளில் 30 முன்னாள் விடுதலைப்புலி பெண் உறுப்பினர்களைஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கீழ் இந்தப் பெண் உறுப்பினர்கள் பணியாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுவதோடு, கண்ணிவெடி அகற்றும் பணிகளில் அதிகமான பங்களிப்பினை இராணுவத்தினர் வழங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

# ஆடி மாத இராசி பலன்கள்

## துலாம்

*சித்திரை 3,4ஆம் பாதங்கள்,சுவாதி, விசாகம் 1,2,3,ஆம் பாதங்கள்*

**நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் படைத்த துலாம் ராசி நேயர்களே!**

கலாரசனை மிக்கவர்கள் நீங்கள். ஒரு தகவலை பல தடவை யோசித்து பின்பே செயல்படுத்துவீர்கள். பேச்சாற்றலால் பிறரை கவர்ந்திழுக்கும் தன்மை உங்களுக்கு உண்டு. அணிகலன்கள் அணிவதில் ஆர்வம் கொண்டிருக்கும் நீங்கள் சகல சுக போகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று சொல்வீர்கள். தன்னை புகழ்ந்து சொல்பவர்கள் என்ன காரியம் செய்ய வேண்டுமென்றாலும் அதை முடித்துக் கொடுப்பீர்கள்.

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாத தொடக்கத்திலேயே இராசிநாதன் சுக்ரன் தனாதிபதி செவ்வாயுடன் இணைந்து இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். இருப்பினும் விரயஸ்தானத்தில் சனி பலம் பெறுவதால் விரயங்களும் அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் கூடுகிறதே என்ற கவலை மேலோங்கும்.

இம்மாதத்தில் குரு வக்ர இயக்கத்தில் இயங்குகிறார். 3,6 க்கு அதிபதி வக்ர இயக்கத்தில் இயங்கும்பொழுது முன்னேற்ற பாதிப்புகள் நீங்கும் இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகை கிரகம் என்பதால் அதன் வக்ர இயக்கத்தால் நன்மைகளே வந்து சேரும். குடும்பத்தில் உள்ளவர்களில் யாரேனும் ஒருவருக்கு ஏழரைச் சனி நடந்தால் உங்களுக்கு வரும் பலன் பாதி அளவாக குறையலாம். எனவே பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

யூலை 21ஆம் திகதி கன்னிராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார் ஜென்மசெவ்வாயின் ஆதிக்கத்தால் உடல்நல பாதிப்புகள் உருவாகலாம். மருத்துவச் செலவுகள் கூடும் . உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறையலாம். எனவே அருகில் இருப்பவர்க ளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள முடியும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளில் ஒரு சில உங்களிடமே திரும் வரலாம். எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. செவ்வாய் பெயர்ச்சி வரை மிகுந்த விழிப்புணர்ச்சி யோடு செயற்பட்டால்தான் கூட இருப்பவர்களால் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது.

ஜுலை 22 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார்.ராசிநாதன் பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். வாகன திருத்தச் செலவுகள் அதிகரிக்கும். மாமன் மைத்துனர் வழியில் நடைபெறும் வைபவங்களுக்காகச் செலவிட்டு மகிழ்வீர்கள். ஓகஸ்ட் 2 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் சஞ்சரிப்பதால் பெரிய வழி பிரச்சினைகள் தலை தூக்கும். சேமிப்பில் சிறிது கரையலாம்.

இம்மாதம் அசுர குரு வழிபாடும் தேவ குரு வழிபாடும் உங்களுக்கு அமைதியை வரவழைத்துக் கொடுக்கும்.

உங்கள்·ராசிக்கு 3,6க்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் உங்களுக்கு வழங்கும். உத்தி யோகம், தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி கூடும். சலுகைகள் எதிர்பார்த்த இடத்திலிருந்து கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். நவம்பர் நீடிக்கும் இந்த வக்ர காலம் உங்களுக்கு பல்வேறு வசதி வாய்ப்புகளை அதிகரித்துக் கொடுக்கும்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

விரயச் சனியின் ஆதிக்கத்தால் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.குழந்தைகளின் செயற்பாடுகளை தீவிரமாக கவனிப்பது நல்லது. கணவன், மனைவிக்குள் கருத்தொரு மிக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பக்கத்து வீட்டாரின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சனிக்கிழமை விரதமும் வழிபாடுகளும் உங்களுக்கு சந்தோஷத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

## விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம்,அனுஷம், கேட்டை)*

**சொல்லை செயலாக்கி காட்டுவதில் வல்ல வர்களாக விளங்கும் விருச்சிக ராசி நேயர் களே!**

விடா முயற்சியால் வெற்றிக் கனியை எட்டி பிடிப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். பூமியைப் போல பொறுமையாகவும் இருப்பீர்கள். திடீரென சூறாவளியை போல சுழன்று திரிவதிலும் பிரியப்படுவீர்கள். அன்புக்கு அடிமையாவீர்களே தவிர, அதிகாரத்திற்கு கட்டுபடமாட்டீர்கள். பலாப்பழம் போல, பார்வைக்கு நீங்கள் கரடுமுரடாக காட்சியளித்தாலும், பழகிப் பார்த்தவர்கள் உங்களை விட்டு பிரியவேமாட்டார்கள்.

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து புதிய ஒப்பந்தங்கள் பலவற்றிலும் கையெழுத்திட வைக்க போகிறார். உங்களின் பொருளாதார நிலை உயரும். சுக்ரனோடு, செவ்வாய் இணைவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். புதன் - ஆதித்ய யோகமும், குருச்சந்திர யோகமும், சனிச்சந்திர யோகமும் இணைந்து செயல்படும் விதத்தில் இம்மாதத்தின் கிரக நிலை அமைவதால், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். இதுவரை தொல்லைகள் தீரும்.

இம் மாதம் குருவின் வக்ர இயக்கமும் இருக்கிறது. தன பஞ்சமாதிபதி வக்ரம் பெறுவதால், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம். .குழந்தைகள் நலன் கருதி எடுக்கும் முயற்சிகள் கடைசி நேரத்தில் கைகூடும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளும், அது சம்பந்தமான விரயங்களும் ஏற்படலாம். வரன் தேடுபவர்கள், வந்த வரனை பிரயாசை எடுத்து முடிப்பது நல்லது. குரு வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள்.

ஜுலை 21 ஆம் திகதி கன்னிராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். இலாப ஸ்தானத்தில் ராசிநாதன் சஞ்சரிக்கும் பொழுது, சனியோடு இணைந்திருந்தாலும் கூட குருவின் பார்வையால் புனிதமடைவதால், வருமானம் திப்ருதி தரும். வருங்கால நலன் கருதி தீட்டிய புதிய திட்டங்கள் வெற்றிபெறும். இதுவரை எடுத்த முயற்சிகளில் இருந்த தடை அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராகும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

ஜுலை 22 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். 11 க்கு அதிபதியான புதன் பத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழிலில் பாக்கிகள் வசூலாகி பரவசப் படுத்தும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.ஓகஸ்ட் 2 ஆம் திகதி கன்னிராசியில் சுக்ரன் சஞ்சரிப்பதால், அந்நியதேச வாய்ப்புகள் எண்ணியபடியே கைகூடும்.விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

இம்மாதம் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமைய அம்பிகை வழி பாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.

உங்கள் ராசிக்கு 2,5 க்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறுகிறார். சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனிக்கு சத ஸ்தானத்தில் குரு வக்ரம் பெறுவதால், உங்களைப் பொறுத்தவரை வக்ர குரு வளர்ச்சியைத் தரும் என்றே சொல்ல வேண்டும். இருப்பினும், செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் இனிய மாதமாக அமைய போகிறது. ஏராளமாக பணம் வந்து தாராளமாகச் செலவிடப் போகிறீர்கள். சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். தொட்டிலில் குழந்தை தவழ்வதற்கான அறிகுறி தோன்றும். தொலைபேசி வழி தகவல் நன்மையை வழங்கும். (தொடரும்)

## நிபுணர் குழுவுக்கு உதவியாக 8 பேர் அடங்கிய அலுவலகம்

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது இடம்பெற்றதாக கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்துள்ள மூவரடங்கிய நிபுணர்களின் குழுவுக்கு உதவியாக எட்டு பேர் அடங்கிய அலுவலகம் ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தின் பிரதான அதிகாரியான ஜெசிகா நிவ்வரத் என்ற பெண் நியமிக்கப் பட்டுள்ளதுடன் இந்த அலுவலகம் நியூ யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அமைக்கப்படவுள்ளதாகவும் நிபுணர்கள் குழுவிற்கு உதவியாக தகவல்கள் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது இந்த பணியாளர்களின் கடமையென வும் அலுவலகத்தின் பிரதான அதிகாரியாக நியமிக்கபட்டுள்ள பெண் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் பணியாற்றுபவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2)

## புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவர்

### அவுஸ்திரேலியா அறிவிப்பு

புகலிடவிண்ணப்பங்கள் நிகராகரிக்கப் பட்ட இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவர் என அவுஸ்திரேலிய அறிவித்துள்ளது. இது தொடர்பாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இலங்கையில் முன்னேற்றம் அடைந்து வரும் நிலைமைகளின் விளைவாக அவுஸ்திரேலியாவில் இலங்கையர்கள் சிலருக்கே அகதி அந்தஸ்து வழங்கப்படும் சாத்தியம் இப்போது காணப்படுகிறது.


நாட்டின் தகவலின் பரிமாணத்தையும் யு.என்.எச்.சி.ஆரின் அகதிகளுக்கான வழி காட்டல்களையும் அடிப்படையாகக் கொண்டால் இலங்கையின் நிலைவரம் முன்னேற்றம் அடைந்து வருவதை அவை சுட்டி நிற்கின்றன.

அவுஸ்திரேலியா அரசாங்கம் இலங்கையின் புகலிடக்கோரிக்கை விண்ணப்பங்களை பரிசீலிப்பதை இடைநிறுத்தி வைத்திருந்ததை நீக்கியுள்ளதுடன் அங்கு பயணம் மேற்கொள்வது தொடர்பாக பரிசீலிக்கும் இலங்கையருக்கு அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியர் கிலார்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆட்களை கடத்தி வருவோருக்கு கட்டணம் செலுத்த வேண்டாம் என்றும் உங்களின் வாழ்க்கையை ஆபத்தான நிலைமைக்கு உட்படுத்த வேண்டாம் என்றும் அவுஸ்திரேலிய கடற்பரப்புக்கு வந்தால் துரிதமாக தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான யு.என்.எச்.சி. ஆரின் வழிகாட்டல்கள் பற்றி குறிப்பிட்டிருக்கும் பிரதமர் ஏற்றுக் கொள்ளும் விகிதம் வீழ்ச்சியடையும் சாத்தியமுள்ளதாக கூறியுள்ளதுடன் இலங்கையின் குறிப்பிட்ட குழுக்கள் தன்னாலானவரை அகதிகள் என்ற அனுமானத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக புகலிடம் கோரும் சகல விண்ணப்பங்களையும் தனித்தனியாக இப்போது பரிசீலனை செய்ய வேண்டும் என்று யு.என்.எச்.சி.ஆர். குறிப்பிடுவதாக ஜுலியா கிலார்ட் கூறியுள்ளார்.

பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் நெருக்கமாக செயற்படுவதன் மூலம் ஆட்களை கடத்தி வருவதை நிறுத்துவது தொடர்பாக அவுஸ்திரேலிய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (6-2)



யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் தொடர் தெய்வீக இசைப்பேருரை நிகழ்த்திய கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மாவிற்கு ஆலய பரிபாலன சபை சார்பில் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம் .

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

## மாதிரி பரீட்சை–12
## வினாத்தாள் –I


நேரம்- 45 நிமிடம்

1,2 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள உருவத்திற்கு மிகவும் பொருத் தமான சொல்லை தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. 

1. நிறம் 2. காற்று 3.வடிவம்


(..............................................)

2. 

1.வேகமாக ஓடக்கூடியது
2.மிருதுவானது
3.கேட்கும் திறன் அதிகம்


(..............................................)

3. கோலத்தை அவதானித்து இடைவெளியில் (?) வரவேண்டிய இலக்கத்தின் கீழ் கோடிடுக.






1. 20 2.96 3.92

4. மாபிள்கள் மூன்று அடைப்புக்களில் ஒரு குறித்த கோலத்திற்கு ஏற்ப அடுக்கப்பட்டுள்ளன. அக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்பினுள் மாபிள்கள் வைக்க வேண்டிய முறையை வரைக.



5. பின்வரும் உருவிலுள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து கீறிடுக.




6. 



7. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
ஞாயிறுக்கு வெம்மை போல திங்களுக்கு......

1. தண்மை 2. சூடு 3. அனல்

8. வெளிச்சத்துக்கு நிழல் போல மழைக்கு......?

1.கடல் 2. வெள்ளம் 3. தண்ணீர்

கீழே தரப்பட்டுள்ள உருக்களுள் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.




10.வினாக்களில் தரப்பட்ட பழமொழிகளில் நன்கு விபரிக்கும் கருத்தினை தெரிவு செய்து கீறிடுக.

- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
  1. உணவு மண்ணாய்ப் போகும்
  2.உலோபத்தனம் கூடாது
  3.உண்ணாமல் சேமித்து வைத்தல் வேண்டும்.

11. கமலின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் வல்லவன். கமலின் வீட்டிற்கு வந்த நண்பன் ஒருவன் கேட்ட வினாவுக்கு விடை கூற அவனால் முடியவில்லை. இதற்கு பொருத்தமான பழமொழி எது?
1. நிறைகுடம் தளம்பாது
2. முயற்சி திருவினையாக்கும்.
3.ஆனைக்கும் அடி சறுக்கும்.

12. தரப்பட்ட சம்பவங்களை ஒழுங்குமுறைப்படி வரிசைப்படுத்திய இலக்க ஒழுங்கை தெரிவு செய்க.

அ.துளையிட்ட பகுதி மேற்புறமாக இருக்கும்படி பொம்மைக்காரின் பின்பகுதியில் ஒட்டுங்கள்


ஆ.பின்னர் பலூனை ஊதி அதன் வாய்ப்பகுதியை கைகளால் அழுத்திப்பிடித்துக் கொள்ளுங்கள்.

இ.காரைத் தரையில் வைத்து பலூனை பிடித்திருக்கும் கையை எடுங்கள்.


ஈ. கத்தியைக் கொண்டு காட்போட்டில் துளையிடுங்கள்.

உ.காட்போட் துளைக்குள் காப்பக்கமிருந்து பலூனை துளையுங்கள்.


1. 2,4,5,1,3 2. 4,3,2,1,5 3. 1,2,3,4,5

13. 



தரப்பட்ட திண்ம உருவை B பக்கமாக பார்க்கும் போது எவ்வாறு தோற்றமளிக்கும்





14. சதுரமுகி வடிவிலான பெட்டி ஒன்றின் விரிப்பு காட்டப்பட்டுள்ளது. மேல் இருக்குமாறு விரிப்பை மடித்து பெட்டி ஆக்கப்பட்டது என்ன பெட்டியின் அடிப்பாகத்தில் உள்ள படம் யாது.




15.கீழே தரப்பட்ட சதுரக் கடதாசியை முக்கோணமாக மடித்து படத்தில் காட்டப் பட்டவாறு துண்டு வெட்டி எடுக்கப்பட்டால் விரிக்கும் போது எவ்வாறு தோற்ற மளிக்கும் என்பதைக் காட்டும் படத்தின் கீழ்க் கோடிடுக?






16. குமாரிடம் சில பலூன்கள் உள்ளன. அதில் இரண்டைத் தவிர மீதி வெள்ளை நிறம் இரண்டைத் தவிர நீல நிறம் இரண்டைத் தவிர மீதி சிவப்பு நிறம். குமாரிடம் எத்தனை பலூன்கள் உள்ளன.

1. 12 2. 8 3. 6

17.விருந்துபசாரம் ஒன்றிலே இரண்டு வடைக்கு ஒரு வாழைப்பழமை வீதம் வழங்கப் பட்டது. வடையும், வாழைப்பழமும் மொத்தம் 63 பரிமாறப்பட்டது எனின் எத்தனை வாழைப்பழங்கள் பங்கிடப்பட்டு இருக்கும்.

1. 205 2. 200 3. 210

18. பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
கற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்.

இங்கு கூறப்பட்ட பாடல் கற்றவர் பற்றிக் கூறுவது எனின் மூன்றாவது வரியின் கீழ் கோடு கீறுக. அவ்வாறன்றி ஒழுக்கம் பற்றிக் கூறுவதெனின் நான்காவது வரியில் கீழ் கோடு கீறுக.

19. கீழே தரப்பட்ட எண் எழுத்துத் தொடர்களை அவதானித்து அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்படுக.

| |
|---|
| 3, 5, 7, 8, 2, 0, 3, 9, 7, 6, 2, 5, 8, |
| க, சு, ஆ, ம், க, ப, ட, ச, று, ப, வ, டி, கு, |

- இரண்டாவது தடவையாக வரும் 7 ஐச் சுற்றி வட்டம் இடுக.
- இரண்டாவது தடவையாக வரும் 3 ஐச் இரண்டாவது தடவையாக வரும் 'க'வையும் ஒரு கோட்டினால் இணைக்குக.
- நதி என்னும் சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள எழுத்துக்களைக் கண்டுபிடித்து அவற்றின் கீழ்க் கோடிடுக.


20. பாடசாலையில் இருந்து கல்விப் சுற்றுலா சென்ற மாணவர்கள் காலை உணவிற்காக பாணையும் கொண்டு சென்றனர். 1 பாணை 9 துண்டாக வெட்டினால் 198 துண்டுகள் பெறலாம். பாணை 6 துண்டுகள் வெட்டினால் எத்தனை துண்டுகள் பெறப்படும்.

1.168 2.132 3.140

21. தோடம்பழம் ஒன்று வாங்கும் பணத்திற்கு 2 மாம்பழங்கள் வாங்கலாம். 1 மாம்பழம் வாங்கும் பணத்திற்கு. இரண்டு வாழைப்பழங்கள் வாங்கலாம். 1 வாழைப்பழம் 2 ரூபா 50 சதம் எனின் தோடம்பழத்தின் விலை யாது?

1.6.00 2. 10.00 3.8.00

22. வாகனங்கள் 2 சில்லு வாகனங்கள், 3சில்லு வாகனங்கள் என்பவற்றுக் கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு கீழே ஒரு வரையப்பட்டுள்ளது.




இந்த உருவில் அதிகமாகக் காணப்படுவது
1. 3 சில்லு வாகனங்கள்
2. 2சில்லு வாகனங்கள்
3. வாகனங்கள்.

23.தரப்பட்ட கூட்டில் உள்ள எண்ணக்கரு பிரதிபீடமாக வரக்கூடிய எண் கூட்டைத் தெரிவு செய்க.


[20 X10] + 75 =275

1.[10X10] 2.[20 X15] 3.[50 X4]


ஆபின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்கு பொருத்தமான பதத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்க.

24.இரையைக் கண்ட நரி வேகமாக ஓடியது.
1. இறைச்சி , மெதுவாக
2.உணவு, ஆறுதலாக 3.நீர், தூரம்.


25.குறியீடுகளையும் கருத்துக்களையும் அவதானித்து வாக்கியங்களாக்கி எழுதுக.




கண்ணன் மது பாடசாலை செல்ல வில்லை சென்றான் பஸ் நடந்து கோயில்



................ ................ ................




................ ................ ................



................ ................ ................ ................

28. கோலத்திற்கு ஏற்ப வெற்றுக்கூட்டினை நிரப்புக.




1. 14 2.13 3. 15

29.A,B நகரங்களுக்கு சரி நடுவே E,நகரம் அமைந்துள்ளதுA,E நகரங்களுக்கு சரி நடுவே D, நகரம் அமைந்துள்ளது A,D நகரங்களுக்கு சரி நடுவே C நகரம் அமைந்துள்ளது. இதன்படி சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
மிகத் தொலைவில் அமைந்துள்ள இரண்டு நகரங்களும் எவை?
1. E,B 2.D,E 3.A,C

30. Dயிலிருந்து சமதூரத்தில் அமைந்துள்ள இரண்டு நகரங்களும் எவை?
1. C,A 2.C,E 3.A,E


1 கிலோ கிராம் சீனியும் + 250 கிராம் தேயிலை ரூ.280
1கிலோ கிராம் சீனியும் +500கிராம் விசுக்கோத்து ரூ.270
250கிராம் தேயிலை + 500 கிராம் விசுக்கோத்து ரூ.330

31. 1. 500கிராம் தேயிலை + ஒரு கிலோ கிராம் விசுக்கோத்தின் விலை யாது?
1. ரூ.330 2.ரூ.500 ரூ.510

32. 2கிலோ கிராம் சீனி + 500 கிராம் தேயிலை + ஒரு கிலோ கிராம் விசுக்கோத்தின் விலை யாது?
1. ரூ.330 2.ரூ.500 ரூ.510

33 . நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை எனின் நேற்று முதல் நாள்
1.வியாழன் 2. வெள்ளி 3.சனி


34.




A-மருத்துவமனை
B-பாடசாலை
C-வாசிகசாலை
D-மைதானம்

பாடசாலையிலிருந்து ஏனைய மூன்று இடங்களுக்கும் செல்வதற்குக் குறைந்த தூரமாக அமையும் சரியான வழியைத் தெரிவு செய்து கோடிடுக.
1. → A → C→ D 2.→ C → D →A 3.→ A → D →C

35.





உணவு, சிற்றுண்டி , லட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு பினவரும் உரு காட்டப் பட்டுள்ளது. இதில்Bயினால் காட்டப்படுவது
1.உணவு 2.சிற்றுண்டி 3.லட்டு

36. பானுவிடம் மூன்று வகையான நாணயக்குற்றிகள் 12 இருந்தன. அந்நாணயக் குற்றிகளின் முழுப்பெறுமதி ரூபா30 ஆகும். மேற்கூறிய கருத்தினைத் திருப்திப்படுத்தும் கூற்று.

| | | |
|---|---|---|
| ரூபா 5 நாணயம் 4<br>ரூபா 2 நாணயம் 4<br>ரூபா 1 நாணயம் 2 | ரூபா2 நாணயம் 6<br>ரூபா 5 நாணயம் 3<br>ரூபா 1 நாணயம் 3 | ரூபா 1 நாணயம் 6<br>ரூபா 5 நாணயம் 3<br>ரூபா 2 நாணயம் 3 |

37. 1ஆம் 2ஆம் பொதிகளின் உள்ள பொருட்களின் பெறுமதிகளை அவதானித்து 3 ஆம் பொதியில் உள்ள பொருளின் பெறுமதியைக் கணித்து விடை தருக.




முதலாம் பொதி இரண்டாம் பொதி மூன்றாம் பொதி

38. ஒரு சதுர வடிவான காணியின் சுற்றளவு 240m ஆகும். இக்காணியின் ஒரு பக்க நீளம் எவ்வளவு.
1.120 m 2.90 m 3. 60m

39. தற்போது அமீனின் வயது அஜ்மியின் வயதைப் போல 5 மடங்கு ஆகும். இருவரினதும் வயதின் கூட்டுத் தொகை 60 வருடங்கள் எனில் அமீனின் வயது என்ன?
1.10 2.30 3.50.

40 வடிவம் என்ற சொல்லைக் குறியீடாக எழுதினால்
1.5351 2.5432 3.5454

## எம்.ரி.வி. மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யுமாறு பணிப்புரை

(கொழும்பு)

எம்.ரி.வி.ஊடகம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களை கைது செய்ய கொழும்பு கோட்டை நீதிமன்றம் பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி அன்று கொழும்பு-பிரேபுரூக் பிளேஸில் அமைந்துள்ள எம்.ரி.வி.ஊடக தலைமையகத்திற்குள் புகுந்த கும்பல் அவ் அலுவலகத்தை தாக்கி சேதப்படுத்தியது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய 16 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று கொழும்புக்கோட்டை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போது சம்பவத்தின் சந்தேக நபர்கள் என சிரச தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள பட்டியலில் உள்ள 14 பேர் எங்கே இருக்கிறார்கள் என்ற விசாரணை இன்னமும் நடந்து வருவதாக பொலிஸார் நீதிபதிக்கு தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த நீதிபதி குறித்த தாக்குதல் சம்பவத்தை படம் பிடித்த புகைப்படக்காரர்களிடம் வாக்கு மூலம் பெற்று அதன் உதவியுடன் சந்தேக நபர்களை உடனே கைது செய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இத்தாக்குதல் சம்பவத்தின் சான்றுகளாகவுள்ள புகைப்படங்கள் மற்றும் ஒளிப் பதிவு நாடாக்களையும் நீதிபதி பார்வையிட்டார்.

நீதிமன்ற விசாரணைக்கு நேற்று சமூகமளிக்கத் தவறிய 12ஆம் மற்றும் 14ஆம் சந்தேக நபர்களை கைது செய்யும்படியும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (6-2)

## ஊனமுற்ற விடுதலைப்புலி சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு நீதி மன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஊனமுற்ற விடுதலைப்புலி சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு உச்ச நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இடம்பெயர் முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த சில மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊனமுற்ற குறித்த விடுதலைப்புலி சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

செல்வன் என்டன் ஜுட் என்ற இளைஞன் புலிகளுடன் தொடர்புபட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றால் கண்பார்வை பாதிக்கப்பட்டுள்ள அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு விட்டுள்ளது.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான மூவர் அடங்கிய நீதவான்கள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனை செய்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர் ஒருவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையானது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

## விசேட அதிரடிப்படையின் உயரதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு திடீர் இரத்து

(கொழும்பு)

விசேட அதிரப்படையின் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு திடீரென இரத்து செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விசேட அதிரடிப்படைப்பிரிவைச் சேர்ந்த 29 பொறுப்பதிகாரிகளுக்கு துணை பொலிஸ் அத்தியட்சகர் பதவிகள் வழங்கப்பட்டதாகவும் திடீரென இந்த பதவி உயர்வுகளை பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய இரத்து செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவிற்கு அமைய இந்த பதவி உயர்வுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை கடந்த 13ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பதவி உயர்வுகள் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் பொலிஸ்மா அதிபர் திடீரென இந்த பதவி உயர்வுகளை இரத்துச் செய்யும் வகையிலான சுற்று நிருபம் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இதன் படி குறித்த விசேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரிகள் மீண்டும் தமது பழைய பணிகளை தொடரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துணைப்பொலிஸ்அத்தியட்சகர்களுக்கான பதவி உயர்வு நேர்முகப்பரீட்சைகளின் பின்னர் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-4)

## அமெரிக்காவில் பிரதி ராஜாங்க செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்

அமெரிக்காவின் பிரதி ராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் பி. ஸ்டின்பேர்க் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரதி ராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் பி.ஸ்டின்பேர்க் இந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என அமெரிக்கா ராஜாங்க திணைக்களப் பேச்சாளர் பிலிப் க்ரொவ்லி தெரிவித்துள்ளார்.

ஸ்டின்பேர்க் கடந்த சில வாரங்களாக பல நாடுகளுக்கு விஜயம் செய்து வருவதாகவும் கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளீட்ட பல நாடுகளுக்கு அவர் விஜயம் செய்துள்ளதாகவும் இந்த வாரத்தில் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஸ்டின்பேர்க் என்ன காரணத்திற்காக இலங்கைக்கு விஜயம் செய்கிறார் என்பது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (6-4)

## இஸ்ரேலில் விவசாயத்துறையில் இலங்கையருக்கு தொழில்வாய்ப்பு

(கொழும்பு)

இஸ்ரேலில் விவசாய தொழில் துறையில் இலங்கையருக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் என இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.


இஸ்ரேல் அரச அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக இலங்கைப் பிரதித் தூதுவர் டபிள்யூ எம்.எஸ். பண்டார குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் கடந்த வருடத்தில் விவசாயத் தொழில்துறையில் தொழில்களுக்காக ஏழு இலங்கையர்கள் இஸ்ரேல் வருகை தந்துள்ளதாக அவர் கூறியுள்ளதுடன் விவசாயத்துறையில் இலங்கைத் தொழிலாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க இஸ்ரேலிய அரசாங்கம் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

அங்குள்ளபாலைவனங்களில்அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளில் தொழிலாளர்களுக்குத் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. (6-2)

## 21.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- கி.மு 356-ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றான ஆர்ட்டெமிஸ் என்ற கிரேக்கக் கோயில் தீ வைத்துக்கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டது.
- 1545- ஆங்கிலக் கால்வாயில் வைட் தீவில் முதற் தடவையாக பிரெஞ்சுப் படைகள் தரையிறங்கின.
- 1718- ஒட்டோமான் பேரரசுக்கும் வெனிஸ் குடியரசுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1774- ரஷ்யாவும் ஒட்டோமான் பேரரசும் தமது ஏழு ஆண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.
- 1831- பெல்ஜியத்தின் முதலாவது மன்னர் லெப்பால்ட் 1 முடி சூடிய நாள்.
- 1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவில் மனாசஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற முக்கியமான போரில் கூட்டமைப்பு அணி வெற்றி பெற்றது.
- 1944- இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாமில் தரையிறங்கி ஜப்பானியப் படைகளுக்கெதிராகத் தாக்குதலை ஆரம்பித்தனர்.(ஆகஸ்ட்10 இல் இது நிறைவடைந்தது)
- 1954- ஜெனீவா மாநாட்டில் வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1961- நாசாவின் மனிதரை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தில் இரண்டாவது பயணம் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 4.கஸ் கரிசம் என்பவர் விண்வெளிக்குக் பயணித்தார்.
- 1964- சிங்கப்பூரில் மலே இனத்தவர்களுக்கும் சீனர்களுக்கும் இடையில் கலவரம் மூண்டதில் 23 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர்.
- 1969- நீல்ஆம்ஸ்ட்ரோங்,எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் அப்பலோ 11 விண்கலத்தில் சென்று சந்திரனில் நடந்த முதல் மனிதர் என்ற புகழைப் பெற்றனர்.
- 1972- வட அயர்லாந்து தலைநகர் பெல்ஸ்பாட்டில் இடம்பெற்ற 22 தொடர் குண்டுவெடிப்புகளில் 9 பேர் கொல்லப்பட்டு 130 பேர் படுகாயமடைந்தனர்.
- 1977- நான்கு நாட்கள் நீடித்த லிபிய-எகிப்தியப் போர் ஆரம்பமானது.
- 2007- ஹரிபொட்டர் தொடர் நாவலின் கடைசிப் பாகம் வெளிவந்தது.

### பிறப்பு

- 1899- ஏர்னெஸ்ட்ஹெமிங்வே,அமெரிக்க எழுத்தாளர்(இ.1961)

### இறப்புகள்

- 1899- சாரதாதேவி,ஆன்மீகவாதி, சுவாமி இராமகிருஷ்ணரின் மனைவி (பி.1853)
- 1998- அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் (பி.1923)
- 2009 - கங்குபாய் , இந்துஸ்தானி இசைப் பாடகி (பி.1913)

**2001-தமிழ்த் திரைப்பட நடிகரான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இறந்தார். (பி.1927)**



## வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்

### பிரதமர் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைத்து நாடுகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆசிய வலய வறுமை ஒழிப்பு மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள பிரதமர் சீன குமீமின் நகரில் நடைபெறும் ஆசிய வலய வறுமை ஒழிப்புக்கான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

இதன் போது அவர் தெரிவிக்கையில், இலங்கையில் வறுமை ஒழிப்புக்கான வலுவான வேலைத் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

அத்துடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் துரித அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (6)

## ஹபரணைகாட்டில் தீ பரவியதில் 2500 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஹபரணை காட்டின் ஹூருளு வனாந்தரப் பகுதியில் நேற்று முன்தினம் பரவிய தீயினால் சுமார் 2500 ஏக்கர் காடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது திட்டமிட்ட காடு எரிப்பாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிப்பதுடன் தீயை அணைப்பதற்கு சீகிரியா விமானப்படையினரின் உதவி பெறப்பட்டது.

விமானப்படையின் இரண்டு ஹெலிகொப்டர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

எனினும் நேற்று முன்தினம் இரவு வரை தீ முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவில்லையென வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானப்படையினருக்கு உதவியாக பொலிஸாரும் பணியில் ஈடுபட்டனர். (6)

## அம்பாந்தோட்டை காங்கேசன்துறை துறைமுகங்களை 10 வருடங்கள் சீனாவுக்கு வழங்க அரசு திட்டம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களின் நிர்வாகப் பணிகள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பொறுப்பு என்பவற்றை 10 வருடங்கள் சீன நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்வது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருவதாக கொழும்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சீனாவின் சைனா ஆபர் நிறுவனத்துடன் பேச்சு நடத்தி இறுதி முடிபும் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சைனா ஆபர் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக எக்சஸ் நிறுவனத்தின் உரிமையாளர் சுமால் பெரேரா செயற்பட்டு வந்த போதிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவே இந்த நிறுவனத்தினை இயக்கி வருவதாக தெரியவருகிறது.

அத்துடன் சைனா ஆபர் நிறுவனமே அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

### படகுகளைப் பாதுகாக்க மன்னாரில் சிறு துறைமுகங்கள்

மன்னார் மாவட்டத்தில் படகுகளை பாதுகாப்பதற்கு சிறிய அளவிலான துறைமுகங்கள் 06 அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் சந்திரசேகரபிள்ளை பவாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பள்ளிமுனை, பேசாலை, தாழ்வுப்பாடு, வங்காளை அரிப்பு, விடத்தல் தீவு ஆகிய மீன்பிடி கிராமங்களிலேயே மேற்படி துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றின் மூலம், படகுகளைப் பாதுகாக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கைதடி பொது நூலகத்தினரால் கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சி நிகழ்வில் மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### காட்டு நிலாவாரை

Botanical Name -Cassia obovata
Family - Caesalpiniaceae
Engl -Senegal senna
Sinh- Sena kola

இது ஓர் ஆண்டுச் செடியாகும். 30 தொடக்கம் 60 செ.மீ வரை தரையோடு படர்ந்து வளரக்கூடியது. கூட்டிலை ஒன்றுவிட்ட இலையமைப்பு சிற்றிலைகள் எதிரிலை அடுக்கம் கொண்டவையாகவும் 3-6 சோடிகளாகக் காணப்படும். முட்டை வடிவ இலைகளாகவும் மெல்லிய பச்சை நிறமுடையவையாகவும் காணப்படும். இருபாலான ஒழுங்கற்ற பூக்களைக் கொண்டிருப்பதையும் அப்பூக்கள் பிரகாசமான மஞ்சள் நிறமுடையதாகவும் இருக்கும் காய்கள் 4 செ.மீ. நீளமும் 1.5 செ.மீ அகலமுடையவையாகும். அவரை வடிவிலான காய்களாக தோற்றமளிக்கும் ஒவ்வொரு பழங்களிலும் 10 விதைகள் காணப்படுவதோடு கோளவடிவான விதைகளாகவும் இருக்கும்.

**இனவிருத்தியும், பரம்பலும்:**

யாழ். மாவட்டத்தில் கைதடி, நெடுந்தீவு போன்ற பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைகளை விதைத்து 90 நாட்களில் பின்பு, முதல் தடவை முதல் இலைகளைப் பறிக்கலாம். இரண்டாம், மூன்றாம் அறுவடை அண்ணளவாக 40 நாட்களின் பின் இலைகளைப் பறிக்கலாம்.

அறுவடை செய்த இலைகளை 7-10 நாட்கள் நிழலில் உலர வைக்க வேண்டும். இலைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறம் வரும் வரை காய வேண்டும். அதன் பின்பு மருந்துகள் தயாரிப்பதற்கு சேர்க்கக் கூடியதாக இருக்கும்.


பொதுவாக மருந்துகளில் பயன்படும் இலைகளை மழை காலத்தில் சேகரிக்காமல் வெப்ப காலத்தில் சேகரிக்க வேண்டும். வெப்ப காலத்தில் சேகரிக்கப்படும் இலைகள் மிக்க தரமானவையாக இருக்கும்.

**மருத்துவப் பயன்கள்:**

♦ இவ் மரத்தின் இலைகளும், இளம் காய்களும் வேர்களும் மருத்துவ குணம் மிக்கவையாகும். இதில் இருவகையான இனங்கள் உண்டு.

1.நாட்டு நிலாவாரை
2.காட்டு நிலாவாரை

நாட்டு நிலாவாரையானது இந்தியாவில் பெரியளவில் பயிரிட்டு வெளிநாடுகளிற்கு




ஏற்றுமதி செய்யப்படும் இது அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஒரு மூலிகையாகும். யாழ். குடாநாட்டு வைத்தியர்களால் காட்டு நிலாவாரைதான் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் நாட்டு நிலாவாரை தரம் கூடியதாகும்.

♦ உடலில் ஏற்படும் தோல்வியாதிகளில் முக்கியமாக ஊறல், சொறி போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணியாகும்.

பொதுவாக நிலாவாரைக்கு குமட்டலை ஏற்படுத்தும் தன்மை இருப்பதால், தனி மூலிகையாக அல்லாமல் வேறு மூலிகைகளுடன் சேர்த்து பயன்படுத்தும் போது சிறந்த பலனைக் கொடுக்கும்.

♦ மலச்சிக்கல் நீங்க காட்டு நிலாவாரை இலைகளையும் றோசாப்பூ இதழ்களையும் சம அளவில் சேகரித்து நன்றாக நிழலில் உலர்த்தி பொடி செய்து அரித்தெடுத்து 2 கிராம் அளவு 30 மில்லி வெந்நீரில் சேர்த்து கலக்கி 20 நிமிடங்கள் ஊறும்படி மூடிவைத்து பின்பு பருக மலச்சிக்கல் சீராகி வயிற்றுக்குமட்டல் வயிற்றுவலி தணியும்.

♦ காட்டு நிலாவாரை இலைகளை எலுமிச்சைங் காய்புளி விட்டு அரைத்து உடலில் பூசி வர சொறி, சிரங்கு, படைத்தேமல் முதலியவை நீங்கும்.

♦ நிலாவாரை வேர், பிரப்பங்கிழங்கு வேர், மிளகு, வேர்க்கொம்பு, காரைஇலை ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் அளவு வெந்நீரில் கரைத்துக் கொடுக்க வாத நோய்கள் தீரும்.

♦ நிலாவாரை இலை 35 கிராம், வேர்க்கொம்புத்தூள் 2 கிராம் இலைகளை 500 மில்லி வெந்நீரில் ஒரு மணிநேரம் ஊற வைத்து வடிகட்டி 30-60 மில்லி காலை, மாலை பருகக்கொடுக்க வயிற்றுப்பிசம், வயிற்றுவலி நீங்கி மலச்சிக்கல் நீங்கும்.

♦ நிலாவாரை வேரின் பட்டையை உரித்து எலுமிச்சைப்பழச்சாறு விட்டு மைபோல் அரைத்து படை, நீண்ட நாள் தேமல் இவற்றுக்குப் பூசி வர இரவில் நல்ல குணம் கிடைக்கும் அல்லது நிலாவாரை வேரின் பட்டைகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி, பொடி செய்து 1-2 கிராம் அளவு பாலில் காலை, மாலை பருக மலச்சிக்கல், மூலநோய், தோல்வியாதிகளால் ஏற்படும் அரிப்பு நீங்கி முற்றாக மாறும்.

♦ நிலாவாரை முழுச்செடி வேருடன் கூடியது. 100கிராம் மிளகு 10 கிராம் வேர்க் கொம்பு, 10கிராம் வாய்விடங்கம், ஒவ்வொன்றையும் தனித்தனியாக நன்கு இடித்து அரித்து எல்லாவற்றையும் மீண்டும் ஒன்றாகச் சேர்த்துமீண்டும் இடித்து அரித்து வைத்துக்கொள்ளவும் 2 கிராம் அளவு காலை, மாலை பசும் பாலுடன் சேர்த்துப்பருக நீண்ட மலக்கட்டு, மலக்கிருமிகள் நீங்கி சீரணம் ஏற்பட்டு உடலில் உள்ள இரத்தம் சுத்திகரிக்கப்படும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

குறிப்பு:- எமது பிரதேசத்தில் காற்று நிலாவாரைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் நாட்டு நிலாவாரை இனத்தின் பரம்பல் அதிகமாகவும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. குறிப்பாக இணுவில், திருநெல்வேலி, சுதுமலை, சண்டிலிப்பாய் போன்ற பிரதேசங்களில் பரம்பல் அதிகம் உள்ளது.

எனவே நாட்டின் நிலாவாரையை இனங்கண்டு கொண்டால் அதனையும் பயன்படுத்தலாம். தோல் வியாதிகளுக்கும், தோலில் ஏற்படும் அரிப்பிற்கும் மலக்கட்டுக்கும் நிலாவாரை சிறந்த நிவாரணி மூலிகையாகும்.

## சிறுவர்களும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்

(கொழும்பு)

சிறுவர் தமது முறைப்பாடுகளை நேரடியாகப் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டம் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் குறிப்பிடுகிறது.

சிறுவர் நட்புறவுக்கான பொலிஸ் கொள்கை என இந்தச் செயற்றிட்டத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்தன தெரிவித்தார்.

சிறுவர் பராமரிப்பு விசேட கவனம் செலுத்தும் அடிப்படை நிறுவனம் என்ற ரீதியில் பொலிஸ் திணைக்களம் மூலம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு வழங்கக்கூடிய ஓரிடமாக பொலிஸ் சேவையை மாற்றுவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்கள் வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## பல்கலைக்கு தெரிவாகும் சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க திட்டம்

### யாழ். மாவட்டசமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவர்களுக்கு மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் பல்கலைக்கழகக் கற்றல் காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கான கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. ஜனாதிபதி இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். வெகு விரைவில் இந்த திட்டம் அமுலுக்கு வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## இலங்கை கடற்பரப்பில் மூழ்கிய கப்பல்களை மீட்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் மூழ்கிய 16 கப்பல்களை மீளக் கரைக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வர்த்தக கப்பல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சாந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்காக எதிர்காலத்தில் கேள்வி மனுவைக் கோரவுள்ளதாக வர்த்தக கப்பல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அட்டாளைச்சேனை, வாழைச்சேனை, காலி போன்ற பிரதேசங்களில் கூடுதலான கப்பல்கள் மூழ்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கப்பல்கள் மூழ்கியுள்ள 16 இடங்கள் குறித்த தகவல்களை இதுவரை திரட்டியுள்ளதுடன் அவற்றுக்கான கேள்வி மனு கோரப்படவுள்ளதாக வர்த்தக கப்பல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் பிரிவு கடலில் மூழ்கிய கால கட்டம் தொடர்பில் உறுதியாக கூறமுடியாத அதே வேளை அவற்றில் புராதன பெறுமதியான பொருட்கள் காணப்படின் அவை விற்கப்பட மாட்டாது எனவும் அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த நாட்டை அண்மித்த கடல்பகுதிகளில் சுமார் 84 கப்பல்கள் மூழ்கியிருப்பதாக கடல் படைத்தகவல்கள் தெரிவிப்பதாக சாந்த வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.(6-4)

## டெங்கு நோயை கட்டுப்படுத்தக் கோரி மாணவிகள் பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வேகமாகப் பரவி வரும் டெங்கு நோயையைக் கட்டுப்படுத்துமாறும் நோயைப் பரப்பும் நுளம்புகள் பரவும் இடங்களை உருவாக்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கோரி அம்பாறை கல்முனையில் மாணவிகள் பாரிய ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலத்தில் ஈட்டனர்.

கல்முனை மஹ்மூத் பாலிகா கல்லூரியின் மாணவிகள் பெருமளவில் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேசத்தில் வீதி வழியாகச் சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வையும் இவ் ஊர்வலம் இனங்காட்டியது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பலர் டெங்கு நோயினால் உயிரிழந்தும் பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் குப்பைகளை அகற்றுவதிலும் வடிகால்களை துப்புரவு செய்வதிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (6-4)

## கோப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய மாகாணப் பாடசாலைகளில் பணிபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் அதிபர் சேவை வகுப்பு I வகுப்பு -2- I உத்தியோகத்தர்களிடமிருந்து கோப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலர் பதவிக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சேவை நீடிப்பில் உள்ளோர் தவிர்ந்த மேற்படி வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்படிவத்தை ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்ய சந்தர்ப்பம் ஏற்படாதவிடத்து மாத்திரம் அதிபர் சேவை 2 -Iஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் தெரிவிற்குக் கருத்தில் கொள்ளப்படும் எனவும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-4)

## அங்கொடை மனநல வைத்தியசாலை பெயர் மாற்றப்பட்டுள்ளது

(கொழும்பு)

அங்கொடை மனநல வைத்தியசாலையின் பெயர் தேசிய மனநல சுகாதார நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சு மேலும் தெரிவித்ததாவது,

நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அங்கொடை மனநல வைத்தியசாலையின் பெயரை தேசிய மனநல சுகாதார நிறுவனம் என மாற்றம் செய்துள்ளார்.

சாதாரண பொதுமக்கள் அங்கொடை வைத்தியசாலை என்ற பெயரை விரும்புகிறார்கள் இல்லை. இப்பெயரை மாற்றும்படி பௌத்த மதக் குழுக்கள் மற்றும் பல்வேறு குழுவினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து அங்கொடை வைத்தியசாலையின் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அதே போன்று மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் பெயரை மாற்றும்படியும் பலர் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (6)

## வருடாந்த திருவிழா

(ஊர்காவற்துறை)

நாரந்தனை இருதய ஆண்டவர் வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை காலை 7 மணிக்கு பங்குத் தந்தை யே.அ. அருள்நேசன் தலை மையில் இடம்பெறும். (2-72)

## தேசிய இனப் பிரச்சினையும் புதியதொரு அரசியலமைப்புக்கான விவாதமும்

(யாழ்ப்பாணம்)

சனநாயகத்திற்கும் பன்மைத்துவத்துக்குமான தமிழ்பேசும் மக்களின் முற்போக்குத் தளத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் "தேசிய இனப்பிரச்சனையும் புதியதொரு அரசியலமைப்புக்கான விவாதமும்" இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிமுதல் 7 மணி வரை 128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமுறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் "பல்லின அரசொன்றிற்கான அரசியலமைப் பாக்கம் தொடர்பிலாக சில சிந்தனைகள்" என்னும் தலைப்பில் அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளரும் சனாதிபதியின் சட்டத்தரணியுமான கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ணவும் "தமிழ் மக்களின் அரசியல் எதிர் காலம் தொடர்பான சில அவதானிப்புக்கள்" என்னும் விடயம் பற்றி இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் சா.தியாகலிங்கம் "அரசியலமைப்பில் அரச அதிகாரத்தை வரையறுப்பதற்கான அரசியல் மே 2009 க்குப் பின்னரான விவாத நிலைகளை அடையாளம் காணல்" என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை உதவி விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-4)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையினால் முகாமைத்துவப் பயிற்சி

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். மாவட்ட கிளையினால் 23, 24, 25 ஆம் திகதிகளில் நிர்வாக முகாமைத்துவப் பயிற்சி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியானது, இல 37/1 றக்கா வீதியில் உள்ள ஒழுங்கையில், றெஸ்ற் விடுதியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.மாவட்டக்கிளை ஊழியர்களும், இலங்கை செஞ்சிலுவை சங்கப் பிரிவு கிளைகளின் எழுதுவினைஞர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இப்பயிற்சிக்கு மேற்குறிப்பிட்ட அனைவரையும் பங்கேற்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் பி.குகராஜன் தெரிவித்துள்ளார். (2-134)


## மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | சாவகச்சேரி -110 | 07.08.2010 | மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 2 | அச்சுவேலி - 107 | | |
| 3 | சுன்னாகம் - 109 | | |
| 4 | காங்கேசன்துறை - 031 | | |
| 5 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 6 | யாழ் பிரதான வீதி - 104 | 07.08.2010 | |
| 7 | சேவை நிலையம் ,உரும்பிராய் - 865 | | |
| 8 | சங்கானை - 108 | | |
| 9 | யாழ் பல்கலைக்கழகம் - 162 | | |
| 10 | சேவை நிலையம்,திருநெல்வேலி -855 | | |
| 11 | பருத்தித்துறை - 285 | 08.08.2010 | |
| 12 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 13 | நெல்லியடி - 106 | | |
| 14 | யாழ் ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 15 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 16 | யாழ் கன்னாதிட்டி - 284 | 08.08.2010 | |
| 17 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |

**அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

**பிராந்திய முகாமையாளர்**

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# பிரபாகரனின் வழக்கை விசாரித்த நீதிபதி ஓய்வு பெற்றார்

தடா நீதிமன்ற நீதிபதியாக இருந்த பி.ராம லிங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மீதான ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்து வந்தார்.

இலங்கையில் பிரபாகரன் இறந்துவிட்டதாக தகவல்கள் வந்துள்ளதை அடுத்து இந்த வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக அவரது இறப்புச் சான்றிதழை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிபதி பி.ராமலிங்கம் உத்தரவிட்டு இருந்தார்.

இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ள நிலையில் நீதிபதி பி.ராமலிங்கம் ஓய்வு பெற்றுள்ளார். இதற்கான பிரிவு உபசார விழா தமிழ்நாடு நீதிபதிகள் சங்கம் சார்பில் சென்னையில் நடைபெற்றது.

கோவைமாவட்ட முதன்மைநீதிபதி எஸ்.பாஸ்காரன் உட்பட சங்க நிர்வாகிகள் மாவட்ட நீதிபதிகள் மாஜிஸ்திரேட்டுகள் தமிழ கத்தின் பல்வேறு இடங்களில் இருந்து வந்து பி.ராமலிங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்தனர். (6-2)

# மீனவர் வலையில் சிக்கிய அனகொண்டா குட்டிகள்

கடலூர் அருகே உள்ள முத்துகிருஷ்ணா புரம் கிராமத்திலுள்ள உப்பனாற்றில் மீனவர்கள் மீன்பிடிப்பது வழக்கம். உப்பானாறு ஓடையில் கடந்த ஞாயிறு இரவு மீனவர்கள் சிலர் வலை விரித்து மீன் பிடித்துள்ளனர். பின்னர் வலையை இழுக்கும் போது கனமாக இருந்ததால்.ஏதோ அதிகளவில் மீன்கள் கிடைத்துள்ளதாக நினைத்து மகிழ்ச் சியடைந்தனர். கரைக்கு திரும்பியவர்கள் மீன் களை எடுக்காமல் வலையை படகிலேயே வைத்துவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளனர்.

வலையில் இருக்கும் மீன்களை நேற்று முன்தினம் பிரித்து பார்த்த போது அதில் இருந்த பாம்புகளை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். வலையில் பல் மற்றும் தலை பகுதி சிக்கியதால் 21 பாம்புகள் இறந்து விட்டன. 19 பாம்புகள் உயிருடன் பிடிபட்டது.

இது குறித்து வனத்துறையினர் கூறியதாவது, இந்த வகை பாம்புகள் நீர் மலைப்பாம்புகள் என அழைக்கப்படும். அனகொண்டா பாம்பு வகையை சேர்ந்தது. உப்பு கலந்த ஆற்று நீரில் மட்டும் வாழக்கூடியவை மீன்களை உணவாக உட்கொள்ளும் தலைபகுதி அனகொண்டா போன்றும், உடல் முழுவதும் முதலை போன்று சொரசொரப்புடன் இருக்கும். விஷத்தன்மை கிடையாது அதிகப்படியாக 18 அடி வரை வளரக்கூடியது. வலையில் சிக்கிய பாம்புகள் அனைத்தும் குட்டிகள் என்பதால் காட்டுப்பகுதியில் வாழ்வது கடினம். எனவே மீன்பிடி பகுதி அல்லாத கடல் அருகில் உள்ள ஆற்றுப்பகுதியில் விட்டுவிடுவோம் என்றனர். (6)

# இந்திய உள்துறை அமைச்சருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

தீவிரவவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக இந்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்திற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தீவிரவாத அமைப்பின் மேலிட உறுப்பினர் ஒருவரை அண்மையில் ஆந்திர மாநிலத்திலுள்ள அடிலாபாத் என்ற காட்டுப் பகுதியில் இந்திய பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

இந்நிலையில் அமைச்சர் ப.சிதம்பரம் உள்துறை செயலாளர் ஜி.கே.பிள்ளை ஆகியோர் மீது தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் சதித்திட்டத்திட்டமிட்டிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தீவிரவாதிகளின் தகவல் தொடர்பு நடவடிக்கைகளை இந்திய புலனாய்வுத்துறையினர் இடைமறித்து கேட்ட போதே இது தொடர்பில் தெரியவந்தாகவும் இதனையடுத்து இவர்கள் இருவருக்குமான பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கையில் ப.சிதம் பரத்திற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படு வதையும் அவர் தொடார்ந்து அதை மறுத்து வருவதாகவும் ஆனாலும் அவர் செல்லும் இடங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (6-2)

# ஒக்டோபஸுக்கு அதிக கிராக்கி

(மும்பை)

உலக கோப்பை கால்பந்தின் 8 போட்டிகளை ஒக்டோபஸ் 'பால்' சரியாக கணித்ததால், ஒக்டோபசை செல்ல பிராணியாக வளர்க்க பலர் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் ஒக்டோபசை எப்படி விற்பனை செய்வது என பெட்ஷாப் உரிமையாளர்கள் திணறி வருகின்றனர்.



உலக கோப்பையால் புகழ் பெற்றது 'பால்' ஒக்டோபஸ். கிளி, கீரிப்பிள்ளை ஜோதிடம் பார்த்தவர்கள் எல்லாம் இப்போது ஒக்டோபஸ் ஜோதிடத்தை நம்ப தொடங்கி விட்டனர். ஒக்டோபசை வைத்து யாராவது ஜோதிடம் பார்க்கிறார்களா என்று விசாரிக்கின்றனர்.

பலர் ஒக்டோபசை வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்க போட்டி போடுகின்றனர். கடைக்காரர்களிடம் ஏராளமானோர் ஒக்டோபஸ் வாங்கி தர முடியுமா என்று விசாரித்து வருகின்றனர்.

இதுபற்றி நவி மும்பையை சேர்ந்த பெட் பேரடைஸ் கடை உரிமையாளர் சேகர் ஹாக் கூறுகையில்,

''தினமும் 10 பேருக்கு மேல் போன் செய்து ஒக்டோபஸ் கிடைக்குமா என்று கேட்கின்றனர். ஒக்டோபசுக்கு நாங்கள் எங்கே போவது'' என்றார்.

விலங்கு நல வாரிய உறுப்பினர் அனுராதா சானே கூறுகையில், ''ஒக்டோபசை அரிய உயிரின பாதுகாப்புக்கான சர்வதேச சட்டத்தின்படி அதை இந்தியாவில் தனிநபர்கள் வளர்க்க முடியாது. அது சட்ட விரோதம் வன விலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வரும். வளர்க்க அனுமதியில்லை'' என்றார். (6-4)

# அடுத்தடுத்து ரயில் விபத்துக்கள்; மம்தாமீது இடதுசாரிகள் கடும் தாக்கு

(புதுடில்லி)

மேற்கு வங்கத்தில் கடந்த இரண்டே மாதங்களில் இரு பெரும் ரயில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதற்கு, ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜீயை இடது சாரிகள் பாரதிய ஜனதா கட்சியினர் கடுமையாக கண்டித்துள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சீதாராம் யெச்சூரி கூறுகையில்,

''சயிந் திரா ரயில் விபத்தில் இருந்து உச்சபட்ச அலட் சியப் போக்கு தெளிவாகிறது. கடந்த ஓராண்டில் எண்ணற்ற ரயில் விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதெனவும் இந்த விடயத்தில் பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனவும் கூறினார்.

மேலும் இந்த நிகழ்வுகளுக்குப் பொறுபேற்று பதவி விலகவேண்டும் என்பதெல்லாம் ஒரு விடயமல்ல பிரச்சனைக்கும் தீர்வு காண்பதே முக்கியம் என்று யெச்சூரி தெரிவித்தார்.

இதனிடையே மேற்கு வங்க ரயில் விபத்துக்கு தார்மிகப் பொறுப்பேற்று ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி பதவி விலக வேண்டும் என்று அம்மா நில சட்டப்பேரவையில் இடது சாரி எம்.எல்.ஏக்கள் வலியுறுத்தினர்.

ரயில் பயணிகளின் பாதுகாப்பில் மம்தா அலட்சியப்போக்குடன் செயல்படுவதால் மேற்கு வங்கத்தில் அடுத்தடுத்து ரயில் விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜியின் நோக்கம் எல்லாம் 2011 சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக வேண்டும் என்பதுஆகும். அவருக்கு ரயில் பயணிகளைப் பற்றி எவ்விதக் கவலையில்லை என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ராபின் மண்டல் எம்.எல்.ஏ குற்றம் சாட்டினார்.


இந்த குற்றச் சாட்டுக்களுக்கு திரிணமூல் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் சட்டப்பேரவையில் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.மேற்கு வங்கத்தில் நிகழ்கின்ற ரயில் விபத்துக்களுக்குப் பின்னணியில் சதி இருப்பதாகவும் இது குறித்து மத்திய அரசும் ரயில்வே துறையும் விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

பாரதி ஜனதா கட்சியின் செய்தி தொடர்பாளர் தருண் விஜய் தெரிவிக்கையில்; ''ஒரு முக சிந்தனையுடன் ரயிவே துறை மீது முழு கவனத்தையும் மம்தா பானர்ஜி செலுத்த வேண்டும் மென்றும் மேற்கு வங்க அரசியல் தளமாக ரயில்வே அமைச்சக அலுவலகத்தை அவர் பயன்படுத்தக் கூடாது. எனவும் அப்படி நினைத்தால் அதற்கு பதில் இலாகா இல்லாத அமைச் சராகவே அவர் இருக்கலாம். என்றும் அதுவே சிறந்ததாகும்'' என்றார்.

மம்தா பானர்ஜிக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் "விபத்துக்கள் என்றால் விபத்துக்கள் தான். அவற்றை யாராலும் கணிக்க முடியாது. அதனால் தான் விபத்து என்று அழைக்கிறோம்." என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.மேற்கு வங்கத்தின் சயிந்தா ரயில் நிலை யத்தில் நேற்று அதிகாலை எக்ஸ்பிரஸ் ரயில் மீது மற்றொரு ரயில் மோதியதால் ஏற்பட்ட விபத் தில் 60 பேர் பலியாகினர். இந்த விபத்தில் காயமடைந்த 86 பேர் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

முன்னதாக கடந்த மாதம் மே 28 இல் மேற்கு வங்கத்தில் ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் விபத்துக்குள்ளானதில் 148 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (6-2)

## பாரதச் செய்திகள்



மேற்கு வங்கத்தில் ரயில்கள் மோதிவிபத்து நடந்த சைந்தியா ரயில் நிலையத்தில் நொறுங்கி உருக்குலைந்து கிடக்கும் ரயில் பெட்டிகளுக்குள் யாரேனும் சிக்கிக்கிடக்கிறார்களா என தேடும் பணியில் ஈடுபட்ட உள்ளூர் இளைஞர்கள்.

# அ.தி.மு.க கூட்டணியில் புதிய தமிழகம் இணைகிறது

## ஜெயலலிதா–கிருஷ்ணசாமி திடீர் சந்திப்பு

(சென்னை)

அ.தி.மு.க கூட்டணியில் புதிய தமிழகம் கட்சியும் இணைவது தொடர்பாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுடன், புதிய தமிழகம் கட்சித் தலைவர் வைத்தியர் கிருஷ்ணசாமி நேரில் சந்தித்துப் பேசினார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்ட சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் அ.தி.மு.க தீவிரம் காட்டி வருகின்றது.ஏற்கனவே ம.தி.மு.க இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ள அ.தி.மு.க, தே.மு.தி.க வுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஜெயலலிதாவை நேற்று முன்தினம் கிருஷ்ணசாமி அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.தேர்தல் கூட்டணி குறித்து இருவரும் நீண்ட நேரம் விவாதித்தனர்.

இதன்பின் செய்தியாளர்களிடம்பேசிய கிருஷ்ணசாமி,இரு கட்சிகளும் இணைந்து கூட்டணி அமைப்பது தொடர்பாகப் பேசியதாகக் கூறினார். புதிய தமிழகம் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் குறித்து அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் போது விரிவாக விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (6-2)

நீ எதை விழுங்க முடியும் உன்னை எது– விழுங்க முடியும் என்பதை நீ பார்க்க வேண்டும்.

–இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## முன்பு விசேட குழு வந்தது இப்போது விசேட தூதுவர் வருகிறார்

இலங்கை அரசு மீளக்குடியமர்த்தலில் கவனம் செலுத்தவில்லை. ஏனோதானோ என்ற போக்கில்தான் அரச நிர்வாகம் செயற்படுகின்றது.

இவ்வாறு குறை கூறியிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி இலங்கைக்கு விசேடதூதுவர் ஒருவரை அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

செம்மொழி மாநாட்டுக்குப்பின்னர் ஈழத்தமிழருக்காக அவர் குரல் கொடுக்க முற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழக சட்ட சபைத்தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் அடுத்த தடவையும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு பலமான பிரசாரம் தேவை.

அதிலும் தமிழக சட்டசபைத் தேர்தலில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிய கருத்துக்கள் கட்டாயமாக இருக்க வேண்டும் என்பது நியதியாயிற்று.

எனவே, கலர் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்தேன், இலவச மருத்துவக் காப்புறுதியை அறிமுகப்படுத்தினேன், செம்மொழி மாநாட்டை நடத்திக்காட்டினேன் என்ற தேர்தல் பிரசாரப்பட்டியலில்,

ஈழத்தமிழரின் துயர்போக்க–கண்ணீரைத் துடைக்க–வன்னியில் அவர்களை மீளக்குடியமர்த்த குரல் கொடுத்தேன்.

சிறப்புத்தூதுவரை அனுப்பி அங்கு தேநீர் குடிக்க வைத்தோம் என்றெல்லாம் கூறலாம் அல்லவா? அதற்காகத்தான் கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழரின் துன்பத்தை தனக்கான ஆயுதமாக எடுத்துள்ளார்.

கலைஞரின் நோக்கம் இதுவென்றால், இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கின் நோக்கம் என்ன?

சோழியன் குடுமி மட்டுமல்ல; சீக்கியரின் தலைப்பாகையும் சும்மா ஆடாது.

சீனர்கள் இலங்கைக்குள் நுழைந்துவிட்டனர். சீனர்கள் இலங்கைக்குள் ஊடுருவி இருப்பது இந்தியாவிற்கு பேராபத்தாக அமையும் என இந்தியப் புலனாய்வுத்துறையும் எதிர்க்கட்சிகளும் எச்சரித்துள்ளன.

இந்த எச்சரிக்கை சாதாரணமானதல்ல. சில வேலை மன்மோகன் சிங், சோனியா ஆட்சியை தூக்கி எறிந்துவிடவும் கூடும்.

எனவே ஈழத்தமிழர் பிரச்சினையை மீண்டும் கையில் எடுக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆக ஈழத்தமிழரின் பிரச்சினை தேவைப்படும் மன்மோகன் சிங்கும்–கலைஞர் கருணாநிதியும் சேர்ந்து அது தொடர்பில் கடிதம் எழுதுகின்றனர்.

கூடவே விசேட தூதுவர் ஒருவரை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

முன்பும் ஒருதடவை கலைஞரின் ஏற்பாட்டில் விசேடதூதுக்குழுடி.ஆர்.பாலுதலைமையில்வந்தது.

அதில் வந்த தொல்.திருமாவளவனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்லசாத்து சாத்தி அனுப்பினார்.

டி.ஆர்.பாலு வாய்திறக்கவில்லை. நிலைமை இதுவாக இருக்க அடுத்த விசேட தூதுவர் வரப்போகிறாராம்.

யார் அந்த விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரியோ?

## நீதிமன்றில் ஆஜராகத் தவறியதையடுத்து

# உதவி பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை கைது செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப்பிரிவு அங்கத்தவர் என குற்றம் சுமத்தப்பட்ட தியாகராஜா மோகன்ரூபன் என்பவருக்கு எதிரான வழக்கில் நீதிமன்றிற்கு சமுகமளிக்கத் தவறியமையை அடுத்து இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எல்.ஏ.ரணசிங்க எனும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் இவ் வழக்கின் பிரதம சாட்சியாவார். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கும் படி அவருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதையடுத்து அவரை கைது செய்யுமாறு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா மேற்படி சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் ஏற்கனவே 5 தடவைகள் இவ்வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார். அதையடுத்து குறித்த உதவி பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி வழக்கை செப்ரம்பர் 2ஆம் திகதி ஒத்திவைத்தார். (ச–5)

# வாகன உதிரிப்பாகங்களை வைத்திருந்தவர்களுக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களை கழற்றிவைத்திருந்த ஐவர் கிளிநொச்சி நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில் கைவிடப்பட்ட கனரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள் மற்றும் பஸ்களின் உதிரிபாகங்களை வைத்திருந்த மூவர் கிளிநொச்சி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் இவர்கள் விற்பனை செய்த உதிரிபாகங்களை கொள்வனவு செய்த இருவரும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

இவர்கள் ஐவரும் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி சிவகுமார் உத்தரவிட்டார். (ச)

# பிரித்தானியாவில் இருந்து ஐ.நாவை நோக்கி நடைப்பயணம்

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தியும் தடுப்புக்காவலில் உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியும்பிரித்தானியாவிலிருந்து ஜி.சிவந்தன் என்பவர்ஜெனீவாவில் உள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நடைப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். கறுப்பு ஜூலையை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 9.00 மணி முதல் 11.30 மணி வரை பிரித்தானிய பிரதமர் இல்லத்தை மையப்படுத்தி நடைபெறவுள்ள இரவு நேரப் போராட்டத்தைத் தொடர்ந்து இவரது நடைப்பயணம் ஆரம்பமாகவுள்ளது.

மத்திய லண்டனிலிருந்து நடைப்பயணத்தை ஆரம்பிக்கும் சிவந்தன் ஏ–3 நெடுஞ்சாலையூடாக நடந்து போட்ஸ்மவுத் கடற்கரையைச் சென்றடைந்து அங்கிருந்து பிரன்ஸின் கடற்கரையான கலையை அடைந்த பின்னர் ஜெனீவா நோக்கி நடந்து செல்லவிருக்கிறார்.

இவரது நடைப்பயணத்துக்கு சுமார் இரண்டுவாரம் எடுக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி ஜெனிவாவை சென்றடைந்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மனுக் கையளிக்கப்பட இருக்கின்றது.

சிவந்தனின் நடைப்பயணத்தின் போது அந்தநாட்டுமக்களுக்கு அவர்களின் மொழியில் அச்சிடப்பட் அவரது கோரிக்கைகள் மற்றும் ஈழத்தமிழ்மக்களின் நிலை பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளன. அந்த பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரசபை தலைவர்கள், உறுப்பினர்கள் போன்ற சமூகத்தலைவர்களுக்கான சந்திப்புகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் சிவந்தன் மேற்கொள்ளும் இந்த நடைப்பயணத்தில் தத்தமது பிரதேசங்களில் தமிழ் மக்களும் இணைந்து நடக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (ச–5)

# வருமானவரி தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வருமானவரித்திணைக்களத்தினால் வர்த்தகர்களுக்கும் மற்றும் வருமானவரி செலுத்துவர்களுக்கும் இனி வருமான வரிசெலுத்த இருப்பவர்களுக்குமான முக்கிய கருத்தரங்கு எதிர் வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். குடாநாட்டில் உள்ள வர்த்தக கைத்தொழில் சிறுகைத்தொழில் உரிமையாளர்களும் மற்றும் வருமான வரிக்குட்பட்டு வருமான வரி செலுத்தும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வருமான வரி தொடர்பான தெளிவான விளக்கங்களை பெறுவதற்காக இக்கருத்தரங்கில் பங்குபற்றும்படி யாழ். வணிகர்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

வருமான வரி தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாதவண்ணம் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவதன் மூலம் சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்கு இது உதவி செய்யும் எனவும் இக் கருத்தரங்கில் ச்கலதுறை சார்ந்தவர்களையும் கலந்து பயன்பெறுமாறும் யாழ். வணிகர் சங்கத்தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

இக்கருத்தரங்கு யாழ்.வணிகர்கழக வேண்டுகோளுக்கு இணங்க வருமான வரி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–6,4)

# உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மத்தியக் கல்லூரி க.பொ.த. உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மக்கள் வங்கி வன்னி பிராந்திய உதவி பொதுமுகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக கரைச்சிக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.அருந்தவலிங்கம் கலந்துகொள்கிறார். (ச)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

# செயல்களம்



நல்லனவோ தீயனவோ ஒரு செயலைச் செய்துவிட்டால், மீண்டும் அதைப் பற்றி ஒருபோதும் நினைக்காதே, செய்தது செய்தாயிற்று. மூடநம்பிக்கையைத் தூர ஏறி. மரணமே எதிர்வந்தாலும் பலவீனத்திற்கு இடம் கொடுக்காதே. கழிந்ததை எண்ணிக் கலங்காதே, சென்றதைக் குறித்துச் சிந்திக்காதே, உன் நற் செயல்களையும் நினைவில் வைக்காதே சுதந்திரமாக இரு.

உலகம் வேண்டுவது ஒழுக்கம், அன்பு, தன்னலமற்ற அன்பு இதுயாரிடம் இருக்குமோ அவனையே உலகம் எதிர்பார்த்து நிற்கிறது.

பெரிய செயல்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்ய முடியும்.

# எதுவித ஆதரவுமின்றித் தவிக்கிறோம்; ஓமர் பின்லேடன் தெரிவிப்பு



(டுபாய்)

ஈரானில் தங்களது குடும்பத்தைச் சேர்ந்த 20 பேரும் எவ்வித ஆதரவுமின்றி தவிப்பதாக ஒசாமா பின்லேடனின் மகன் ஓமர் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

ஓமர் பின்லேடன் அல் - அரேபியா தொலைக்காட்சிக்கு கடந்த திங்கட்கிழமை அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, கடந்த 9 ஆண்டுகளுக்கு முன் எங்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஈரான் அரசால் கைது செய்யப்பட்டோம். அன்று முதல் இன்றுவரை நிம்மதியான வாழ்க்கையே இல்லை தொடர்ந்து துன்பத்தையே அனுபவித்து வருகிறோம்.

நாங்கள் எனது தந்தையின் பிறந்த மண்ணான சவுதிஅரேபியாவுக்கு செல்ல விரும்புகிறோம். எங்களை ஏற்றுக்கொள்ள அந்நாட்டு அரசும் தயாராகவுள்ளது. ஆனால் ஈரான் இதற்கு மறுப்புத் தெரிவித்து வருகிறது என்று கூறினார்.

மேலும் ஈரானில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள எனது சகோதரர் சில தினங்களுக்கு முன்பு தொலைபேசியில் பேசிய போது, அவர் அங்கு நரக வாழ்க்கை வாழ்வதாகவும் தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார். இப்படி கஷ்டங்களை அனுபவித்து வரும் எங்களது குடும்பத்துக்கென்று உதவுவதற்கு யாருமில்லை எனவும் ஈரானில் நாங்கள் ஆதரவின்றி தவிக்கிறோம் என்றும் ஓமர் தெரிவித்துள்ளார். (6-4)

# பாகிஸ்தான் விமானப்படை தாக்குதல் 20 தலிபான்கள் பலி; 12 பேர் காயம்

(பெஷாவர்)

பாகிஸ்தானின் ஓரக்ஜாய் ஏஜென்ஸி பழங்குடியினப் பகுதியில் அந்நாட்டு போர் விமானங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் 20 தலிபான்கள் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அண்மையில் உள்ள இப் பகுதியில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. அவர்களின் முகாம்களை குறிவைத்து பாகிஸ்தான் விமானப் படை குண்டு மழை பொழிந்தது.

இதில் பல்வேறு முகாம்கள் பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (4)




# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 2ஆயிரத்து 250 கோடி நிதியுதவி



(இஸ்லாமாபாத்)

அமெரிக்க வெளியுறவுத் துறை மந்திரி ஹிலாரி கிளிண்டன் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அப்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்க ரூ.2 ஆயிரத்து 250 கோடி நிதி உதவி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அணைகள் கட்டவும் மின் உற்பத்தி, விவசாய மேம்பாடு, மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற வளர்ச்சி திட்ட பணிகளுக்கு இந்த நிதி வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் இணைந்து ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருக்கும் அல்கொய்தா மற்றும் தலிபான் தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

# சேர்பியாவுக்கு எதிரான இன ஒடுக்குமுறை குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளத் தயார்

## குரேஷியா அறிவிப்பு

சேர்பியாவிற்கு எதிரான இனஒடுக்கு முறை குற்றச் சாட்டுக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளத் தயார் என குரேஷியா அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் சுமூகமான உறவுகள் ஏற்பட்டால் இன ஒடுக்குமுறை குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற்றுக் கொள்ள முடியும் என குரேஷியா தெரிவித்துள் ளது.

குரேஷிய மற்றும் சேர்பிய ஜனாதிபதிகளுக்கு இடையிலான சந்திப்பின் போது இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

குரேஷிய ஜனாதிபதி இவா ஜெசிபோவிக் முதல் தடவையாக சேர்பியாவிற்கு விஜயம் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



1990 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இனப்படு கொலைகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற குரேஷியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என ஜனாதிபதி ஜெசி போவிக் தெரிவித் துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சேர்பிய ஜனாதிபதி போரிஸ் டேடிக் மற்றும் குரேஷிய ஜனாதிபதி ஜெசிபோவிக் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். (6-2)

# சீனாவில் மழைக்கு பலியானோர் 34 ஆக உயர்வடைந்துள்ளது

சீனாவில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகளில் அகப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்வடைந்துள்ளது.

சிச்சுவான் மாகாணத்தில் 26 பொது மக்கள் உயிரிழந்திருப்பதுடன் 30 பேர் காணாமல் போயிருப்பதாகவும் சீன நாட்டு ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் , ஷான்ஸி மாகாணத்தில் 8 பொது மக்கள் உயிரிழந்திருப்பதுடன், 57 பேர் காணாமல் போயிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்ந்த வாரம் முதல் தென் சீனாவில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு காரணமாக பலர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருப்பதாகவும் சீன நாட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (6)

# கடலில் அசிட் கலப்பதால் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து

## கடல்வாழ் ஆராய்ச்சியாளர்கள் தகவல்

(லண்டன்)

இரசாயன கழிவுகள், சாக்கடை, குப்பைகள் போன்றவை கடலில் கலக்கின்றன. இதனால் அதில் வாழும் மீன்கள் போன்ற கடல்வாழ் உயிரினங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. இரசாயன பொருட்களில் உள்ள அசிட் கலப்பதால் மீன்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்படுகிறது என கடல்வாழ் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல்நீரில் "அசிட் கலப்பதால் அதில் அசுத்தமான காபனீரொட்சைட் அதிக அளவில் கலக்கிறது.

இதனால் அதில் வாழும் மீன்கள் நுகரும் தன்மையை இழந்து வருகின்றன. மீன்கள் குஞ்சுகளாக இருக்கும் போதே உடலில் அத்தன்மை உருவாகி வருகிறது. எனவே அவை நுகரும் சக்தியை இழக்கின்றன, இதன் மூலம் அவை தங்கள் உணவை தேடி பிடிக்கும் சக்தியை இழக்கின்றன. அதே வேளையில் எதிரிகளிடம் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ளும் மோப்ப சக்தியையும் இழக்க நேரிடுகின்றது. எனவே அவை செத்து மடியும் நிலை அதிக அளவில் ஏற்பட்டுள்ளது, தற்போது கடலில் அதிக அள்வில் அசிட் கலந்து வருவதால் உயிர்வாழ் மீன்கள் போராடி வருகின்றன. ஆகவே கடலில் அசிட் கழிவுகள் கலப்பதை குறைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (4-6)



தென்கொரியா, சியோல் விமான நிலையத்திற்கு வந்துள்ள அமெரிக்க பாதுகாப்பு செயலர் ரொபர்ட் கேட்ஸ்சை அந்நாட்டு துணைப்பாதுகாப்பு அமைச்சர் சாங் கிவாங்-இல் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவில் இந்திய ஹோட்டல் வாகனங்களுக்கு மர்ம நபர்களால் தீ வைப்பு

(சிட்னி)

ஆவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்திய ஹோட்டல் வாகனங்களுக்கு மர்ம நபர்கள் தீ வைத்தனர். இதில் இரு வாகனங்களும் எரிந்து சாம்பலாகின.

ஜூலை 5 ஆம் திகதி சிட்னி நகரில் உள்ள இந்திய ஹோட்டல் ஒன்றுக்கு மர்ம நபர்கள் தீ வைத்தனர். அதில் அந்த ஹோட்டல் பலத்த சேதம் அடைந்தது.

இந்நிலையில் அதே பகுதியில் அமைந்துள்ள மற்றொரு இந்திய ஹோட்டலுக்கு சொந்தமான வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்திய ஹோட்டலும் ஹோட்டல் வாகனங்களும் குறிவைக்கப்பட்டுள்ளதால் இது திட்டமிட்ட சதி என்றும் இதில் ஒரே கும்பலின் தொடர்பு இருக்கவே வாய்ப்புள்ளது என்றும் அந்நாட்டு பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதன் அடிப்படையில் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக ஆவுஸ்திரேலியாவில் இந்தியர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. இதனால் அங்குள்ள இந்தியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தற்போது இந்தியர்களின் உடைமைகளை குறிவைத்து தாக்குதல் தொடங்கியுள்ளது.

இது அந்நாட்டில் ஹோட்டல் உள்ளிட்ட பல்வேறு தொழில் புரிந்து வரும் இந்தியர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (6-4)

# ஹேரத், மலிங்க துணிச்சலான ஆட்டம்

# இலங்கை முதல் இன்னிங்ஸில் 520

## சேவாக் அதிரடியில் இந்தியா ஆறுதல்



(காலி)

ஹேரத்-மலிங்க ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 520 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள இந்தியா அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 18ஆம் திகதி காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல்நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து இரண்டாம் நாளான நேற்று முன்தினம் மழை காரணமாக ஆட்டம் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 3 ஓட்டங்களை மேலதிகமாக எடுத்த நிலையில் 3ஆவது விக்கெட்டை இழந்தது.

இதில் ஆரம்ப துடுப்பெடுத்தாடிய பரண விதாரண 233 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 111 ஓட்டங்களை எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய திலான் சமரவீர ஓட்டமெதனையும் எடுக்காமல் மிதுனின் பந்து வீச்சில் எல்பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 260 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்துக் களமிறங்கிய அஞ்சலோ மத்யூஸ் நிதானமாக துடுப்பெடுத்தாடி மஹேல ஜெயவர்தனாவுக்கு சிறப்பான இணைப்பை வழங்கினார்.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாக வழங்கிய போது மஹேலஜெயவர்த்தனா 78 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களை எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பிரசன்ன ஜெயவர்த்தன களமிறங்க மறுமுனையில் அஞ்சலோ மத்யூஸ் 58 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்கள் எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சில் லக்ஸ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 344 ஓட்டங்களை எடுத்து 6ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து ரங்கன கேரத் களமிறங்கி சிறப்பாகத்துடுப்பெடுத்தாட நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளையின் போது இலங்கை அணி 6 விக்கெட்டுக்களையிழந்து 361 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மதிய போசன இடைவேளையின் பின் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 393 ஓட்டங்களை எடுத்த போது 7ஆவது விக்கெட்டையிழந்தது.

இதில் பிரசன்ன ஜெயவர்த்தனா 26 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து மிதுனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து 8ஆவது விக்கெட்டுக்காக ஹேரத்துடன் இணைந்த மலிங்க அதிரடியாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இதில் ரங்கனஹேரத் 53ஆவது பந்தில் தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்திசெய்ய இலங்கை அணி 450 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடிளை பிரிக்க இந்தியத் தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் லசித்மலிங்க 67ஆவது பந்தில் தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இலங்கை அணி 500 ஓட்டங்களைக்கடந்தது.

இந்த ஜோடி 8ஆவது விக்கெட்டுக்காக 138 பந்துகளில் 115 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது லசித் மலிங்க 75 பந்துகளில் (9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 64 ஓட்டங்களை எடுத்து மிதுனின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் நேற்றை மூன்றாம் நாள் தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 124 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 520 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் ரங்கன கேரத் 93 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 80 ஓட்டங்களையும் முத்தையா முரளிதரன் 05 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் புதுமுக வீரர் மிதுன் 28 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 105 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்களையும் வீரேந்திர சேவாக் ஒரு விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே சறுக்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கௌதம் காம்பீர் 02 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து லசித் மலிங்கவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்துக் களமிறங்கிய டிராவிட் நிதானமாகத்துடுப்பெடுத்தாட மறுமுனையில் சேவாக் அதிரடியாக ஆடி இந்திய அணிக்கு நம்பிக்கையளித்தார்.

இதில் ராகுல் டிராவிட் 33 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 18 ஓட்டங்களை எடுத்த போது ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சச்சின் டெண்டுல்கர் 21 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 08 ஓட்டங்களை எடுத்து முத்தையா முரளிதரனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து லக்ஸ்மன் களமிறங்க மறுமுனையில் வீரேந்திர சேவாக் 63 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் நேற்றைய மூன்றாம் நாள்ஆட்டம் போதிய வெளிச்சமின்மையால் முன்பதாக நிறுத்தப்பட்டது.

இதன் போது இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 140 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வீரேந்திர சேவாக் 98 பந்துகளில் (14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 85 ஓட்டங்களையும் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் மலிங்க, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர். போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### முரளிக்கு '7'

இப்போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறும் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் நேற்றைய ஆட்டத்தில் டெண்டுல்காரை ஆட்டமிழக்கசெய்தார்.

இதன் மூலம் முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டி அரங்கில் 793ஆவது விக்கெட்டை சாய்த்தார்.

இப்போட்டியில் மேலும் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினால் முரளிதரன் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட்டுக்களை கைப்பற்றிய சாதனை படைக்கலாம்.

## மகாஜனக் கல்லூரியை 6 விக்கெட்டுக்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

மேற்படி சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி ஆரம்பம் முதல் விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்தது.

நடுவரிசைத்துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இறுதியில் 42.4 ஓவர்களில் 135 ஓட்டங்களுக்கு அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சஞ்சயன், மோசீகீரன், விஜிநாதன் முறையே 32, 29, 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக கோகுலன் 19 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், கிஸாந் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

136 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி கபிலனின் நிதானமான ஆட்டத்தினால் 27.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கபிலன் 44 ஓட்டங்களையும், நேரீஸ் வதூஸனன், ஸ்ரீவனனன் முறையே 24, 27, 12 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜனக்கல்லூரி சார்பாக மதூசன், பிரதீப், டினோசன் முறையே தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.


ஆசியாவிலேயே
முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
பயிற்சி மையம்
An ISO 9001:2000 Certified Company
veta®
Experts in English Training
நெல்லியடி நகரிலும்



புதிய பிரிவுகள் ஆரம்பம்
யாழ்பாணம்
Sat,Sun 9.00 a.m.
Mon,Wed 5.00 p.m.
நெல்லியடி
Tue,Thu 9.00 a.m.
Mon,Wed,Fri 5.00 p.m.
நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம். Tel. : 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலையம் முன்பாக) நெல்லியடி. Tel. : 0777 173517

# சட்டவிரோத மின்சாரப் பாவனை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

## மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 30 வீதம் வரை சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் சட்டவிரோத மின்பாவனைத் தடுக்க இலங்கை மின்சார சபையால் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மின்சார சபை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவில் 30 சதவீதமானவை சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் மின்சார சபையின் அனுமதியின்றி மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ளல், மின்மானி இயங்குவதனைத் தடுத்தல், போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

தற்போது மின்சார சபையினரால் மேற்கொள்ளப்படும் திடீர் சோதனைகளால் சட்ட விரோத மின்சாரத்தைப் பெற்றுக் கொண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீது நடவடிக்கை எடுத்து பல மில்லியன் ரூபாய் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் சோதனை நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது என மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழ்.மாவட்டத்தில் சட்ட விரோதமாக மின்சாரத்தைப் பெறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துத் தண்டப் பணம் அறவிடுமாறு அறிவித்திருந்தார்.

அத்துடன் இந்த நடவடிக்கைக்காக இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகத்தினால் இயங்கும் மேற்படி நடவடிக்கைக்கான தனிப்பிரிவினை யாழ்.மாவட்டத்திற்கு விரைவில் அனுப்புவேன் எனவும் அமைச்சர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

---

## இலங்கைத்...

ருப்பதை சம்பந்தன் குழுவினர் வரவேற்பதாகத் தெரிவித்தனர்.

இதேநேரம் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்காகத் தமிழக முதல்வர் தலையிட்டு மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் தமிழர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் சிறியளவான முன்னேற்ற நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளதாகக் கூட்டமைப்பினர் கருணாநிதியிடம் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் தமிழர்களின் நலன் சார்ந்த விடயங்களைக் கண்காணிப்பதற்காக விசேட பிரதிநிதி ஒருவரை அனுப்ப வேண்டும் எனக் கருணாநிதி மத்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளமையைக் கூட்டமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண வேண்டும் என இதன் போது கோரிக்கை விடுத்த கூட்டமைப்பினர் தமிழர்களின் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களும் இராணுவ மயமாக்கல்களும் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தன் தலைமையில் மாவை. சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-3,5)

---

## ஐ.நாவின் ஆலோசனைக் குழு...

மர்ஸுகி தாருஸ்மான், உறுப்பினர்களான யஸ்மின் ஸுக்கா மற்றும் ஸ்ரீவன் ரட்னர் ஆகியோர் ஜூலை 19 அன்று பிற்பகல் 1.30ற்குத் தமது கலந்துரையாடல்களை ஆரம்பித்தனர் எனவும் இன்னர் சிற்றி பிரஸ் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையிருக்கின்றதா என்பதனை அதுவே முடிவு செய்யும். ஐ.நாவின் அனுமதி அதற்குத் தேவையில்லை என்று ஐ.நா. பேச்சாளர் மாாடின் நேர்ஸ்கி தெரிவித்தார்.

முன்னதாக இவர்களுக்கு விசா வழங்கப்படா மாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. நிபுணர் குழுவின் தலைவர் மர்ஸுகி தாருஸ்மான் துரதிர்ஷ்டவசமானது என இது தொடர்பில் கூறும்போது கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இன்னர் சிற்றி பிரஸின் ஜூலை 17 ஆம் திகதிய செய்திக் குறிப்பில் இலங்கையில் இடையூறுகள் எதுவுமின்றி பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதாக கணிசமான அளவு உறுதி மொழிகளை இலங்கை அரசாங்கம் வழங்கியிருப்பதாக ஐ.நா. இணைப் பேச்சாளர் பர்கான் ஹக் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதோடு ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவுக்கு எதுவித எல்லைகளும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டதாக தெரிவித்திருந்தார்.

ஜூலை 16 ஆம் திகதியான கடந்த வெள்ளிக்கிழமை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் மதிய வேளை செய்தியாளர் மாநாட்டின் போது இன்னர் சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பர்கான் ஹக் இதனைத் தெரிவித்ததாகவும் அது குறிப்பிட்டுள்ளது. (ச-3,5)

---

## சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின்...

நிதிகள் கையொப்பம் இட்ட பின்னர் அதனை வெளியிடுவதே பொருத்த மான நடவடிக்கையாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கை எனக் கூறி ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பி யோகராஜனினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில், தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரிக்கும் நோக்கில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆரம்பத்தில் அதிகமான கட்சிகள் அங்கம் வகித்தன.

எனினும் ஒரு கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவை விட்டு விலகின. இறுதியில் 13 கட்சிகள் மட்டுமே அங்கம் வகித்தன.

இந்நிலையில் 13 அரசியல் கட்சிகளும் 100 க்கும் மேற்பட்ட தடவைகள் கூடி பல்வேறு விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில் ஆரம்பக்கட்ட அறிக்கை ஒன்றை தயாரித்தோம்.

குறித்த ஆரம்பக் கட்டத் தீர்வு அறிக்கையானது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. திட்டம் தொடர்பில் ஜனாதிபதியின் கருத்தையும் கேட்டறிந்து தேவைப்படின் திருத்தங்களை மேற்கொண்டு 13 கட்சிகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்ட பின்னர் இறுதித் திட்டமாக அதனை வெளியிட எண்ணியுள்ளோம்.

ஆனால் இதுவரை நாங்கள் இறுதித் தீர்வை தயாரிக்கவில்லை. மேலும் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்பக்கட்ட திட்டத்தில் சர்வகட்சி குழுவில் அங்கம் வகிக்கும் 13 கட்சிகளினதும் பிரதிநிதிகள் கையெழுத்திடவுமில்லை.

எனவே இவ்வாறான பின்னணியில் எக்காரணம் கொண்டும் ஆரம்பக்கட்ட திட்டத்தை நாடாளுமன்றத்திலோ அல்லது அதற்கு வெளியிலே எம்மால் வெளியிட முடியாது. அது சரியான விடயமல்ல என்றார். (ச-5)

---

## தர்சிகாவின்...

பரிசீலனை செய்த நீதிவான் சடலத்தை நீதிவான் மற்றும் பொலிஸார் முன்னிலையில் மீண்டும் தோண்டி எடுத்து மருத்துவ பரிசோதனை செய்வதற்கு உத்தர விட்டார்.

அத்துடன் இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் நீதிவான் ஒத்தி வைத்தார்.

வேலணை வைத்தியசாலை குடும்பநல மருத்துவ உத்தியோகத்தர் சரவணை தர்சிகா கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை அவரது விடுதியில் தூக்கிலிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

---

## 51-வது...

படைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-1)

---

## இலங்கைத் தமிழர் நிலையை அறிய...

இதில் பிரதமர் மன்மோகன் சிங் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பா.சிதம்பரம், தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு, தேசியவாதக் காங்கிரஸ் சார்பில் பிரபில் பட்டேல், தேசிய மாநாட்டுக் கட்சி சார்பில் பரூக் அப்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தி.மு.க. சார்பில் பங்கேற்ற நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கூறியதாவது,

இலங்கையில் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களை உடனடியாக அவர்களது சொந்த இருப்பிடங்களுக்குக் குடியமர்த்தும் பணியை விரைவாக காலதாமதமின்றி நிறைவேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவதும் சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்கின்றது.

இதைத் தடுத்திட பலமுறை முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்தி வருகின்றார். இதற்காக இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கையால் இலங்கை இராணுவம் தங்களது கொடும் செயலை நிறுத்தவில்லை.

இதற்குத் தீர்வு காணத் தமிழக மீனவர்களுக்கு இந்தியக் கடலோரக் காவல்படை பாதுகாக்கு அளிக்க வேண்டும்.

கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் பத்திர மாக வீடு திரும்பும் வரை அவர்களுக்கும் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் ஏற்படும் நிலையை உருவாக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மீள்குடியேற்றத்திற்காக அவர்களுக்கு வீடு கட்டித் தரவும் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் இந்திய அரசின் மூலம் 500 கோடி ரூபாயும் இரண்டாவதாக 50 ஆயிரம் வீடுகள் கட்டித் தர மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட இத்தொகை எந்தளவுக்கு முறையாகச் செயலளிக்கப்படுகின்றது என்பது தெரிந்து கொள்ள முடியவில்லை.

இதற்காக முதலமைச்சர் கருணாநிதி அண்மையில் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இலங்கை அரசு தமிழர் பகுதிகளில் மேற்கொண்ட மறுவாழ்வுப் பணிகளையும் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள உண்மையான நிலைமைகளையும் கண்டறியவும் இந்திய அரசுத் தூதரகம் மூலமாகவோ அல்லது சிறப்புத் தூதுவரை அனுப்புவதன் மூலமாகவோ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதோடு, பாதிக்கப்பட்ட தமிழர்களின் மறுவாழ்வுக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவர்கள் திருப்தியடையும் வகையில் அமைய இன்னும் எத்தனை நாள்கள் தேவைப்படும் என்பதையும் அறிந்து வர வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் ஆலோசனை கூறியிருந்தார்.

முதலமைச்சரின் இந்த ஆலோசனையை உடனடியாகச் செயற்படுத்தத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்திய அரசின் சார்பில் மூத்த அதிகாரிகள் குழுவை நியமித்து இந்திய அரசு கொடுத்த நிதி இலங்கைத் தமிழர்களுக்கு முறையாகக் கிடைத்து அதன் பயனை முழுமையாக அவர்கள் அடைய வேண்டும்.

இலங்கையில் மழைக் காலம் தொடங்கி விட்ட நிலையில் அங்கே தமிழ் மக்கள் அல்லலுறாமல் தடுக்க உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு டி.ஆர்.பாலு பேசினார்.

இதற்கு பதிலளித்த இந்தியப் பிரதமர் இந்தியாவின் மூத்த அரசியல் தலைவரான தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

இந்திய அரசு இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக வழங்கப்பட்ட நிதி முறையாக செலவிடப்படுகின்றதா என்பதை அறிய அதிகாரிகள் குழுவை நியமித்து முறைப்படி அனுமதி பெற்று இலங்கைக்கு அனுப்பி வைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ச-5)

---

## அமைச்சர்...

குறித்த சந்திப்பின் போது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் செய்தியொன்றை நீல் பூனே இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நிறுவப்பட்ட நிபுணர் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் முன்னால் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து நியூயோர்க்கிற்கு அழைக்கப்பட்டிருந்த விதிவிடப் பிரதிநிதி நீல் பூனே நேற்று நாடு திரும்பினார்.

இதேவேளை ஐ.நாவினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது முதல் தடவையாக நேற்று முன்தினம் கூடியது என்று இன்னர் சிற்றி பிரஸ் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தக் குழு ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான திணைக்களத்தினரையும் சந்தித்ததாகவும் குறித்த செய்திச் சேவை மேலும் தெரிவித்தது. (ச-5)

Mr. Concrete

For all your concrete needs!

SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்

- கொங்கிறீற் கற்கள்
- ஓட்டைக் கற்கள்
- வேலித் தூண்கள்



இலவச விநியோகம்

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk

Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.